# தரம் 10

# அறபு இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி



சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

Web: www.nie.lk

Email: info@nie.lk

# அறபு இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் - 10

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

அறபு இலக்கியம்

தரம் 10
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு - 2015

©HARANGraph தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள், விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு : அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015 ஆம் ஆண்டில் தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளிப்பங்களிப்பு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுகவம்

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**கலாநிதி அமீனா காஸிம்**

முதுநிலை விரிவுரையாளர்,

அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை
பேராதெனிய பல்கலைக்கழகம்

**கலாநிதி எம்.எஸ்.எம். ஸலீம்**
முதுநிலை விரிவுரையாளர்,
அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை
பேராதெனிய பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.எச்.எம். ஹனீபா**
முதுநிலை விரிவுரையாளர்,
அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை
பேராதெனிய பல்கலைக்கழகம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக** **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக** **எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.
**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.
**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் முஸ்லிம் வித்தியாலயம்,
நாம்புளுவ.
**வை.எல்.எம்.ஸித்தீக்**
ஆசிரியர்,பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி,
வரகாபொலை.
**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றதுது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாகத் தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தை திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காக குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களை பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

அஷ்ஷெய்க்.ஜே.எம்.ஜெஸார்.
செயற்றிட்டத் தலைவர்

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- பெல்ற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**


- இஸ்லாமிய இலக்கியம் - அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். இத்ரீஸ்
- அல்லுகதுல் அறபிய்யா வஅஹ்காமுத் தஜ்வீத் - முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வெளியீடு
- இலக்கிய கருவூலம் - ஆர். பீ. எம். கனி
- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் - ஏ.எம்.ஏ. அஸீஸ்
- அல் அதபு வன் நுஸுஸ், லிபிய கல்வி அமைச்சின் வெளியீடு

# உள்ளடக்கம்


பக்கம்

- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- வளப்பங்களிப்பு v
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் vi

அறிமுகம் x

தேசிய இலக்குகள் xi

அடிப்படைத் தேர்ச்சிகள் xiii

பாடத்திட்டம் xvi

கற்றல் கற்பித்தல் முறை xx

பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் xxi

கணிப்பீடும் மதிப்பீடும் xxii

- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் 1-73

## 01. அறிமுகம்

ஓர் இலக்கிய வடிவத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்வதற்கும் அது தொடர்பான பூரணமான அறிவு திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இலக்கிய நயம் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகளாக அங்கீகரிக்கப்பட்ட ஆறு மொழிகளில் ஒன்றாகவும், உலகில் சுமார் 1.6 பில்லியன் மக்களால் பேசப்படுவதும், செழுமை மிக்க மொழியாகவும் காணப்படுகின்ற அறபு மொழியின் இலக்கிய வடிவங்கள் நயம்மிக்கவை.

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் கண்ணாடியாக இருப்பதால் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களே இலக்கியமாக பரிணமிக்கின்றன. அரபுலகில் பண்டைய காலம் தொட்டு வாய்மொழி இலக்கியங்கள் இருந்தபோதிலும் ஐந்தாம் நூற்றாண்டின் பின்னரே அரபு இலக்கியம் வளரத் தொடங்கியது. குறிப்பாக அரபு இலக்கியத்தின் மிக்சசிறந்த படைப்பாக அல் குர்ஆன் கருதப்படுகின்றது. அல் குர்ஆனின் வருகை சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றத்தைப்போன்றே அரபு இலக்கியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. முன்னர் இருந்த இழிவான விடயங்கள் நீங்கி உன்னதமான விடயங்கள் இலக்கியத்தில் இடம்பிடித்தன. இவ்வாறான சிறப்புமிக்க அரபு இலக்கிய வடிவங்களை நயப்பதன் ஊடாக மாணவர்களின் உள்ளம், கலை ஆர்வத்தை தூண்டும் வகையில் மாற்றியமைக்கப்படுகின்றது.

தரம் 10 மாணவர்கள், அரபு இலக்கிய நயத்தைக் கற்பதற்கும் க.பொ.த(சா/த) பரீட்சையில் விருப்பத்திற்குரிய ஒரு பாடமாகத் தெரிவு செய்வதற்கும் ஏற்றவகையில் கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்க்கும் நோக்குடன் இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் உள்ள அல் குர்ஆன் வசனங்கள். ஹதீஸ்கள், உரைநடைப்பகுதிகள், கஸீதாக்கள் என்பன மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை தூண்டும் நோக்கத்துடனும் அவர்களது வயது, விருப்பு, இரசனை என்பவற்றைக் கவனத்திற்கொண்டும் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களின் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சந்தர்ப்ப துஆக்கள், படிப்பினைமிக்க சிறுவர் கதைகள் என்பன காணப்படுகின்றன. அரபுக் கவிதைகளின் பொருள் மற்றும் அணிச்சிறப்புக்கள் மாணவர்களிடையே கற்றல் ஆர்வத்தைத் தூண்டுவதோடு புத்தாக்கத்திறனையும் விருத்தி செய்கின்றன.

அரபு இலக்கிய வடிவங்களை கற்பதனூடாக மாணவர்கள் மொழித் திறன்களையும், மொழி வளத்தையும் விருத்தி செய்து கொள்வதுடன், பல்வேறுபட்ட ஆக்கங்களை படைக்கும் திறனையும் விமர்சிக்கும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 02. கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### தேசிய இலக்குகள்

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக்கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போசிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## 03.அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்திசெய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு தகவல் தொழிநுட்பத்தகைமை

| | |
|---|---|
| எழுத்தறிவு | :கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், ஒழுங்காகவும் எழுதுதல், பயனுள்ளவாறு கருத்துப் பரிமாறுதல். |
| எண்ணிக்கை தொடர்பான அறிவு | :உபகரணங்கள், வெளி, காலம் எண்ணுதல், எண்ணுவதற்கும அளவிடுவதற்குமான முறையாக இலக்கங்களை உபயோகித்தல். |
| வரைபுகளை உபயோகித்தல் | :கோடுகள், குறியீடுகளை உபயோகித்துக் கருத்துக்களை வெளிப்படுத்தல், மற்றும் கோடுகள், குறியீடுகள், வர்ணங்களைப் பயன்படுத்தி விளக்குதல், அறிவுறுத்தல் கருத்துக்களை வெளிப்படுத்துதல், அறிக்கையிடல். |
| தகவற் தொழிநுட்பத்திறன் | :கணனி அறிவுடன் கற்றலின் போதும், தொழில் செய்யும் போதும், பிரத்தியேக வாழ்வின் போதும் தகவற் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உபயோகித்தல். |

### (ii) ஆளுமை விருத்திக்கான தேர்ச்சி

ஆக்கபூர்வமான தன்மை, விரிவான சிந்தனை, தொடங்கும் ஆற்றல், முடிவெடுத்தல், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறிவுச் சிந்தனை, தர்க்கரீதியான சிந்தனை, குழுவுணர்வுடன் செயலாற்றுதல், ஆளிடைத் தொடர்பு, புதியவைகளைக் கண்டறிதல், ஆய்வு செய்தல் போன்றவற்றுடன் வெளிப்படையான எண்ணம், பொறுமை, சகிப்பு மற்றும் மனிதநேயம் போன்ற பண்புகள்.

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சி

இத்தேர்ச்சி சமூக, உயிரியல் மற்றும் பௌதீக சூழலுடன் தொடர்புடையது.

| | | |
|---|---|---|
| **சமூகச் சூழல்** | : | தேசிய செல்வங்கள் பற்றிய விளக்கம் பல்லினச் சமூகத்தின் அங்கத்தினராக இருப்பதுடன் இணைந்து வாழ்வதற்கான உணர்வினை கொண்டிருப்பதுடன் உரிய திறன்களையும் பெற்றிருத்தல். சாதாரண கடமைகள் பற்றிய உணர்வு, சமூகத்தொடர்பு, தனிநபர் நடத்தைகள், சாதாரண மற்றும் கட்டுப்பாடுகளுடனான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்பு, கடமைகளும் கட்டுப்பாடும். |
| **உயிரியல் சூழல்** | : | உயிருள்ள உலகம், மக்களும் ஏனைய உயிரினங்களும், |

மரம், செடி, கொடிகள், காடுகள், கடல், நீர், வளி, தாவர - விலங்குகளுக்கும், விலங்குகளுக்கும் மனித வாழ்வுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றிய விளக்கம், உணர்வுகளும் திறன்களும்.

**பௌதீகச் சூழல்** : வெளி, சக்தி, எரிபொருட்கள், திரவியங்கள், பொருட்கள் மற்றும் மனித வாழ்வுடன் தொடர்பு, உணவு, உடை, சுகாதாரம், சக்தி வாய்ப்புக்கள், நித்திரை, அமைதி, ஓய்வு, கழிவுகள், மலசலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பான விளக்கம், உணர்வும் திறன்களும்.

கற்பதற்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.

**(iv) வேலை உலகுக்குத் தயாராகும் தேர்ச்சி**

பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல், தனது தொழிலாற்றல், சவால்களை விளங்கிக் கொள்ளுதல், தனது ஆற்றலுக்கு ஏற்ற தொழிலொன்றைத் தெரிவு செய்வதுடன், போதியளவு வருமானத்தையும் பெறுதல். தனது ஆற்றல்களை உயரமட்டத்தில் வெளிப்படுத்தவும், அதன் பலாபலன்களை அதிகரிக்கச் செய்ய செயற்படுவதோடு அது தொடர்பான திறன்களை வளர்த்தலும்.

**(v) சமயமும் ஒழுக்க விழுமியங்களும் தொடர்பான தேர்ச்சி**

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் ஒழுக்கவிழுமியங்கள், பண்பாடுகள் மற்றும் சமய அனுஷ்டானங்களுக்கு ஏற்புடையவாறு நடத்தல் என்பவற்றிற்கு இயைவாகி, மிகப் பொருத்தமானவற்றைத் தெரிந்து அதற்கு ஏற்றவாறு செயற்படுத்தல்.

**(vi) விளையாட்டு மற்றும் ஓய்வைப் பயன்படுத்தும் தேர்ச்சி**

அழகியற் செயற்பாடுகள், இலக்கியம், விளையாடுதல், விளையாட்டுக்களும் மெய்வல்லுனர் விளையாட்டும், விருப்பூட்டும் செயற்பாடுகளுடன் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளினூடாக வெளிப்படும் ஆக்கபூர்வமான வினோதச் செயல்கள், மகிழ்ச்சி, ஆர்வம் மற்றும் இவ்வாறான மானுட அனுபவங்கள்.

**(vii) ''கற்றலுக்காகக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சி**

துரிதமாக மாறிவருவதும், சிக்கலானதும் ஒருவரோடொருவரில் தங்கியுள்ளதுமான இவ்வுலகில் அம்மாற்றங்களுக்கு ஏற்புடையவாறு நடக்கும் போது, அவற்றினை உணர்வுடனும் அனுகூலமான முறையிலும் எடுத்து மக்களுக்கு சொல்வதும், சுதந்திரமாகக் கற்பதற்கான ஆற்றலை மக்களுக்கு வழங்குவதும்.

# பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0** அறபு இலக்கியத்தின் சிறப்புக்களை நயந்து கூறுவார் | 1.1. அறபு இலக்கியத்தின் சிறப்பம்சங்களையும் அதன் சுருக்க வரலாற்றையும் எடுத்துக் கூறுவார். | • அறபு இலக்கியம்<br>  • அறிமுகம்<br>• அறபு இலக்கியத்தின் உள்ளடக்கம்<br>• நுபுவ்வத்திற்கு முந்திய அரபு இலக்கியம் | • அறபு இலக்கியம் என்றால் என்ன என்பதைஅறிந்து கூறுவார்.<br>• அறபு இலக்கியத்தில் உள்ளடங்குபவற்றை விளக்குவார்<br>• அறபு இலக்கியத்தின் ஆரம்ப வரலாற்றைச் சுருக்கமாக விபரிப்பார்.<br>• அறபு இலக்கியத்தின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார். | 05 |
| 2.0 அல்குர்ஆனையும் அதன் கலைகளையும் நயந்து கூறுவார். | 2.1 அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட சூறாக்களின் இலக்கியப் பாங்கைஅறிந்து கூறுவார். | • சூறா 104 முதல் சூறா 114 வரை<br>  • பின்னணி<br>  • சொல் விளக்கம்<br>  • மொழி பெயர்ப்பு<br>  • இலக்கிய நயம்<br>  • தஜ்வீத் கலை<br>  • மக்கி மதனி | • அல்குர்ஆனில் தெரிவுசெய்யப்பட்ட சூறாக்களின் சொல் விளக்கத்தைக் கூறுவார்.<br>• அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட சூறாக்களின் கருத்தை அறிந்து கூறுவார்<br>• அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட சூறாக்களை ரசனையோடு நயந்து எழுதுவார்.<br>• அல்குர்ஆனிய வசனங்களில் காணப்படும் இலக்கியப் போக்கை அறிந்து கொள்வார். | 05 |
| | 2.2 அல்குர்ஆனின் சூறாக்கள் அருளப்பட்ட பின்னணியை விளக்குவார். | • சூறா 104முதல் 114 வரையிலான சூறாக்கள் | • தெரிவு செய்யப்பட்ட சூறாக்கள் அருளப்பட்டதற்கான காரணங்களை அவை அருளப்பட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புறுத்தி விளக்குவார்.<br>• தெரிவுசெய்யப்பட்ட சூறாக்கள் அருளப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை விளக்குவார்<br>• அருளப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதேசத்தில் காணப்பட்ட இலக்கியங்களோடு ஒப்பிட்டு விளக்குவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 சூறாக்கள் உள்ளடக்கியுள்ள கருத்துக்களை விளங்கி தனது மொழியில் எடுத்துரைப்பார். | • சூறா 104 முதல் 114 வரையிலான சூறாக்கள் | • அறபுச் சொற்களின் கருத்துக்களை விளக்குவார்.<br>• குர்ஆனிய சொற்களுக்குரிய தனித்துவமான கருத்துக்களை விளக்குவார்.<br>• குறித்த சொல்லின் மஸ்தரை அறிந்து கூறுவார்.<br>• ஒவ்வொரு வாக்கியத்தையும் தனது மொழியில் கருத்துச்சிதைவின்றி எடுத்துரைப்பார். | 05 |
| 3.0 ஹதீஸ்களை இலக்கியச் சுவையோடு நயந்து கூறுவார் | 3.1 ஹதீஸ்களில் உள்ளடங்கியுள்ள இலக்கியப்பாங்கை அறிந்து கூறுவார். | • தெரிவு செய்யப்பட்ட ஹதீஸ்கள் | • தெரிவு செய்யப்பட்ட ஹதீஸ்களின் சொல் விளக்கத்தைக் கூறுவார்.<br>• அந்த ஹதீஸ்களின் கருத்தை தனது மொழியில் எடுத்துரைப்பார்.<br>• ஹதீஸ்களில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• அந்த ஹதீஸ்கள் எடுத்துக் கூறும் போதனைகளை தமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவார். | 08 |
| 4.0 தஜ்வீத் கலையையும் அதன் உள்ளடக்கத்தையும் நயந்து கூறுவார். | 4.1 தெரிவு செய்யப்பட்ட சூறாக்களுக் கூடாக அல்குர்ஆனை ஓதுவதற்கான சட்டங்களையும் முறைகளையும் அறிந்து முறைப்படி ஓதிக் காட்டுவார். | சூறா 104-114 வரை தெரிவு செய்யப்பட்ட சூறாக்கள்<br>• இழ்ஹார் • இத்காம்<br>• இக்பாஉ • இக்லாப் | • அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஒழுங்காக ஓதக் கற்றுக் கொள்வார்.<br>• தஜ்வீத் சட்டங்களை விளங்கிக் கூறுவார்.<br>• தெரிவு செய்யப்பட்ட சூறாக்களில் தஜ்வீத் சட்டங்களை இனங்கண்டு கூறுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 அன்றாட துஆக்களை அறிந்து அதனை நயந்து கூறுவார். | 5.1 குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஓத வேண்டிய துஆக்களை இனங்கண்டு அவற்றைத் தினமும் பொருளறிந்து, நயந்து விளங்கி ஓதுவார். | • தெரிவு செய்யப்பட்ட துஆக்கள் | • அன்றாடம் ஓத வேண்டிய துஆக்களை அறிந்து கூறுவார்.<br>• அவற்றின் பொருளை எடுத்துக்கூறுவார்.<br>• அவற்றின் கருத்துக்களை கண்டறிந்து கூறுவார்.<br>• அவற்றில் காணப்படும் மொழி சார் அணி நலங்களை எடுத்துக் காட்டுவார். | 08 |
| | 5.2 அவற்றின் இலக்கிய நயங்களைக் கண்டறிந்து எழுதுவார். | • தெரிவு செய்யப்பட்ட துஆக்கள் | • துஆக்களில் காணப்படும் பொருள்கள் அணிகளை எடுத்துக் காட்டுவார்.<br>• அவற்றில் காணப்படுமு் ஏனைய இலக்கிய நயங்களைத் திறனாய்ந்து கூறுவார். | 03 |
| 6.0 அறபுக் கவிதைகளை வாசித்து இலக்கிய நயங்களை வெளிப்படுத்திக் காட்டுவார் | 6.1. தெரிவு செய்யப்ப்ட்ட கவிதைகளை விளங்கி தனது நடையில் கூறுவார். | • தெரிவு செய்யப்பட்ட கவிதைகள் | • கவிதைகளை மொழிபெயர்த்துக் கூறுவார்.<br>• கவிதைகளில் கையாளப்பட்டுள்ள சொல் நயங்களைக் கண்டறிந்து கூறுவார்.<br>• கவிதைகளில் எடுத்தாளப்பட்டுள்ள உவமை உருவகங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• மொழி சார் அணிகளைக் கண்டறிந்து கூறுவார்.<br>• தெரிவு செய்யப்பட்ட கவிதைகளில் காணப்படும் நயங்களைக் கண்டறிந்து எடுத்துக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 அறபுக் கதைகளை வாசித்து, எழுதி, சுவைத்து வெளிப்படுத்துவார் | 7.1 அறபுக் கதைகளைத் திரட்டியும், வாசித்தும் நயம் காண்பார். | • தெரிவு செய்யப்பட்ட கதைகள் | • கதைகளின் மையக்கருத்தை வெளிப்படுத்துவார்.<br>• கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களின் விழுமியங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• சிறிய கதைகளை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துவார். | 04 |
| | 7.2 அறபுக்கதைகளை எழுதி வருவார். | | • கதைகளில் காணப்படும் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• கதைகளில் காணப்படும் இலக்கிய நயங்களை சுட்டிக்காட்டி விளக்கமளிப்பார்.<br>• இலக்கியச் சுவைமிகு கதைகளை வாசித்து தொகுத்துக் பாதுகாப்பார். | 04 |
| 8.0 அறபுப் பழமொழிகளைக் கண்டறிந்து அவற்றின் பின்னணியையும் இலக்கிய நயத்தையும் எடுத்துக் கூறுவார். | 8.1 அறபுப் பழமொழிகளைக் கண்டறிந்து அவற்றில் இலக்கிய நயம் காண்பார் | • தெரிவு செய்யப்பட்ட பழமொழிகள் | • அறபுப் பழமொழிகளைத் தேடித் திரட்டுவார்.<br>• அறபுப் பழமொழிகளில் காணப்படும் இலக்கிய நயங்களைக் கண்டறிந்து கூறுவார்.<br>• அறபுப் பழமொழிகளுக்கு விளக்கம் கூறும் முறைமையை வெளிப்படுத்துவார். | 04 |
| | 8.2 அறபுப் பழமொழிகளை மொழிப்பிரயோகத்தில் பயன்படுத்திக் காட்டுவார் | | • அறபுப் பழமொழிகளை உரைநடையில் பயன்படுத்திக் காட்டுவார்.<br>• அறபுப் பழமொழிகளை உள்ளடக்கிய எழுத்துக்களைத் தேடித் தமது ஆக்கங்களில் எடுத்தாள்வார்.<br>• அறபுப் பழமொழிகளின் பின்னணியில் அமைந்துள்ள கதைகள், நிகழ்வுகள் போன்றவற்றைக் கண்டறிந்து கூறுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 அறபுத் தமிழ் இலக்கியம் பற்றி விளங்கி ஏயோருக்கும் எடுத்துக் கூறுவார் | 9.1 அறபுத்தமிழின் தோற்றம் வளர்ச்சி பற்றிய வரலாற்றைத் தொகுத்துக் கூறுவார். | • அறபுத் தமிழ் அறிமுகம்<br>• அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்கள் | • அறபுத் தமிழ் ஒரு மொழிவடிவமாக தோற்றம் பெற்றமைக்கான பின்னணியை விபரிப்பார்.<br>• அறபுத் தமிழ் மரபின் சிறப்பம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• அறபுத் தமிழ் மரபின் வளர்ச்சி பற்றி விளக்குவார் | 05 |
| | 9.2 அறபுத்தமிழ் இலக்கிய வடிவங்களை இனங்கண்டு அறபு இலக்கிய வடிவங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவார். | | • அறபுத் தமிழின் இலக்கியப்பங்களிப்பை விபரிப்பார்.<br>• அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுவார்.<br>• அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.<br>• அறபுத் தமிழ் இலக்கியங்களை வாசித்து நயம் கண்டு கூறுவார். | 05 |

## 04. கற்றல்- கற்பித்தல் முறை

எமது கலைத்திட்டத்தில் அறபு மொழி இலக்கிய நயம் ஒரு பாடமாக இணைக்கப்பட்டுள்ளது. அதனை விருப்பத்துக்குரிய ஒரு பாடமாக கற்பதற்கு கவர்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் முறையொன்றைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நாட்டில் பெருவழக்காக இல்லாத அறபு மொழியின் இலக்கிய நயத்தைக் கற்பிப்பதற்கு பொருத்தமான ஒரு செயலொழுங்கை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அறபு உரை நடை இலக்கிய படைப்புகளையும், செய்யுள் இலக்கிய படைப்புகளையும் கற்பதோடு அவற்றின் நோக்கங்கள், மொழியாளுகை, சொற் பொருத்தம், உரையொழுங்கு, இலக்கியச் சுவை, கையாளப்பட்டுள்ள உத்திகள் போன்றவற்றின் சிறப்புக்களை இனங்கண்டு, தமது மொழிப் பிரயோகத்தில் அவற்றை எடுத்தாள்வதிலும், சிறுபடைப்புக்களை தாமாகவே உருவாக்குவதிலும் மாணவரை வழிநடத்த வேண்டிய தேவை உண்டு. இதற்காக மாணவர்களை வழிநடத்துவதற்கு ஆசிரியரின் தொழிற்பாடு முதன்மை பெறுகின்றது.

இலக்கிய வடிவங்களான கதை, கவிதை, நாடகம், உரையாடல், உரைச்சித்திரம், பழமொழிகள் போன்றவற்றில் இடம்பெறும் கற்பனைத் திறன், ஆக்கத்திறன், சமூக திறன் போன்றவற்றோடு கையாளப்பட்டுள்ள உவமான உவமேயங்கள், பல்வேறு அணிகள், ஒத்திசைவுகள் போன்றவற்றை இனங்கண்டு சுவைப்பதற்கும், அவற்றை சுய ஆக்கங்களில் பிரயோகிப்பதற்கும் ஆசிரியர் வழிகாட்டல் வேண்டும்.

புதிய கல்வித்திட்ட ஒழுங்கமைப்பில் கற்பித்தல் செயலொழுங்கு மாணவரை மையமாகக் கொண்ட செயலொழுங்காக அமைதல் வற்புறுத்தப்படுவதால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவரின் இலக்கிய ஈடுபாடு வெளிப்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். உரைநடை, செய்யுள் இலக்கிய பகுதிகளிலிருந்து பொருத்தமான உதாரணங்களைத் தேர்ந்தெடுக்கவும் அதற்கான காரணங்களை முன்வைக்கவும், தாம் சுவைத்த முறையை வெளிப்படுத்தவும் மாணவர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இதற்கான வழிகாட்டல்களையும், செயல்முறைகளையும் ஏற்கனவே திட்டமிட்டுக் கொள்வது பயனுடையதாகும்.

இங்கு சில கற்றல் கற்பித்தல் முறைகள் காண்பிக்கப்படுகின்றன.

- கலந்துரையாடல்
- பங்கேற்றுக் கற்றல்
- சிந்தனைக் கிளர்வு
- தகவல் திரட்டல்
- விவாதம்
- கதை கூறல்
- குழுச் செயற்பாடு
- தேடியாய்தல்
- ஒப்படை

இதற்கு மேலதிகமாக பாடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமான மாணவர் மையச் சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கதாகும்.

அறபு இலக்கிய நயத்தை அறியும் திறனை மேம்படுத்த உதவும் வகையில் இலக்கிய நயம் நிறைந்த சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள், இலக்கிய கட்டுரைகள், தொகுப்புக்கள் போன்றவற்றை தேடவும், கற்கவும், நயக்கவும் கூடியதாக வாய்ப்புக்களும் வளங்களும் கொடுக்கப்பட வேண்டும்.

எனவே அறபு இலக்கியத்தை ஆர்வத்தோடு கற்கவும், படைப்புக்களின் நயங்களை இனங்காணவும், படித்து சுவைக்கவும் பொருத்தமான வழிமுறைகளைக் கொண்டு விளைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் முறைகளை செயற்படுத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 05. பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளரச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். ஓர் இலக்கியவாதி தான் கண்ட, அனுபவித்த நிகழ்வை இலக்கிய வடிவில் உணர்வு பூர்வமாக எடுத்துக்காட்டுவார். அதனை வாசிப்பவர் இலக்கியவாதி உணர்ந்தவாறோ, தாம் உணர்ந்தவாறோ நயப்பார். இது ஒவ்வொருவரின் தனியாள் வேறுபாட்டுக்கேற்ப வேறுபடலாம். இச்சந்தர்ப்பத்தில் மாணவரை உற்சாகமூட்டல், பாராட்டல், தட்டிக் கொடுத்தல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு இலக்கிய நயத்தை சுயமாக வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்த்து விட வேண்டும். இதற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

- பொருத்தமான இலக்கிய ஆக்கங்களை சேகரித்தல்
- மாணவரிடையே இலக்கிய நயம் தொடர்பான போட்டிகளை நடத்தல்
- சிறந்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்
- பிரதேச வளவாளர்கள் மூலம் மேலதிக அறிவையும், திறனையும் பெறச் செய்தல்
- இலக்கிய தினங்களைக் கொண்டாடுதல்
- பிறமொழியிலான இலக்கிய நயங்களோடு அறபுமொழி இலக்கிய நயங்களை ஒப்பிட்டுக் காட்டும் நிகழ்வுகளை நடத்தல்
- பிறமொழி இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்றல்
- இலக்கிய மன்றமொன்றை அமைத்தல்

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற் கொள்வதற்குத் தேவையான பௌதிக மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேற்குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம், அதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் விளைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

அறபு இலக்கிய நயத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளைக் கருத்திற் கொண்டு குறித்த காலத்துக்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாடஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பாட ஆசிரியர்கள் போதியளவு தகைமையுடையவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும்.

இப்பாடத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலக்கிய பரிச்சயமும், நற்பண்புகளும், அழகுணர்வும் கொண்ட நாட்டுக்குப் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி பெறலாம்.

## 06. கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றன. இது ஒவ்வொரு பாடவேளையிலும் இடம் பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

அறபு இலக்கிய நயம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், இலக்கியங்களைத் தேடிக் கற்றல். இலக்கிய படைப்புக்களை(சிறுவர் பாடல்கள், கவிதை, கட்டுரைகள், உரையாடல், சிறுவர் கதை) உருவாக்கல், இலக்கிய நயம் காணும் முயற்சி போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறை சார்ந்த, முறை சாரா வகை மூலம் கண்டறிய முடியும்.

பாட ஆரம்பம் முதற் கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக்கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக்கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு அறபு இலக்கிய நயம் தொடர்பான மதிப்பீடு கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும், மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத்திட்டங்களுக்கூடாகவோ இடம் பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகளையும், வழிமுறைகளையும் நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, பாடல்கள், கதைகள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள், துணுக்குகள், பழமொழிகள் முதலானவற்றை நலனாயும் முறை, திறன், சுய ஆக்கங்களில் கையாளும் திறன் முதலியனவும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் கணிப்பீடும், மதிப்பீடும் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவை தவிர, பாடல்கள், கதைகள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள் நுணுக்குகள், பழமொழிகள் முதலியவற்றை நலனாயும் முறையில் திறன், சுய ஆக்கங்களில் கையாளும் திறன் முதலியனவும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் கணிப்பீடும், மதிப்பீடும் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் முக்கியமானவை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலக்கிய நயம் ஆளுக்காள் வித்தியாசப்படலாம். ஒவ்வொருவரதும் தனித்துவம், சூழல், ஈடுபாடு, சுவை போன்றவற்றைப் பொறுத்து வேறுபட்ட விடைகள் இடம்பெற முடியும். ஆதலால் பொதுவான கணிப்பீட்டு முறையொன்றிருப்பதே பொருத்தமானதாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும், மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : அறபு இலக்கியத்தின் சிறப்புக்களை நயந்து கூறுவார்**

**தேர்ச்சி மட்டம் 1.1 : அறபு இலக்கியத்தின் சிறப்பம்சங்களையும் அதன் சுருக்க வரலாற்றையும் எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 5**

**கற்றல் பேறுகள்:**

- அறபு இலக்கியம் என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- அறபு இலக்கியத்தில் உள்ளடங்குபவற்றை விளக்குவார்.
- அறபு இலக்கியத்தின் ஆரம்ப வரலாற்றைச் சுருக்கமாக விபரிப்பார்.
- அறபு இலக்கியத்தின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- இலக்கியம் என்றால் என்ன என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல். அது பற்றிய ஒரு கருத்தைச் சுருக்கமாக முன் வைத்தல்.
- இலக்கியம் என்பது மனித உள்ளுணர்வுகளையும் காலச்சூழலையும் வெளிப்படுத்தும் சிறந்த ஊடகம். எனவே அது காலத்தின் கண்ணாடி என வர்ணிக்கப்படுகிறது. இலக்கியம் என்பது மனிதனதும் சமூகத்தினதும் பேச்சுக்கள், பாடல்கள், உரையாடல்கள், பழமொழிகள் எனக் குறிப்பிடலாம். மனித உள்ளுணர்வுகளை, மேற்கூறிய வடிவங்களில் வெளிப்படுத்துவதாகும்.
- அரபு மொழியைப் பேசும் அரபுச் சமூகத்தினருக்குரிய இலக்கியமே அரபிலக்கியம் எனப்படுகிறது.
- அரபிலக்கியத்தின் ஆரம்பகால வரலாறு, வரையறை என்பவற்றைச் சரியாக் கணித்துக் கூற முடியாத போதும் இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் முதலே அரபு இலக்கியப் பதிவுகள் இருந்தமைக்கு சான்றுகள் உள்ளன.
- அரேபியர்களது வாழ்வில் போர்களும், பெண்களும், குலப்பெருமையும் முக்கிய கருப் பொருள்களாக அமைந்தன.
- பெண்கள் யுத்தங்களில் பாடகர்களாகவும், அடிமைகளாகவும், பணியாளர்களாகவும், நடுத்தர, பணக்கார வீடுகளில் அடிமைகளாகவும் அமர்த்தப்பட்டனர்.
- அன்று கவிஞர்களுடன் கவிதைகளும் கௌரவிக்கப்பட்டன.
- கவிஞர்கள் பரிசு கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

- சிறந்த கவிதைகள் உக்காழ், துல்மஜாஸ் சந்தைகளில் போட்டி மூலம் தெரிவுசெய்யப்பட்டன.
- தரமான சிறந்த கவிதைகள் எனத் தேர்ந்தெடுக்கப்படுபவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு க.ஃபாவில் தொங்கவிடப்பட்டன.
- க.ஃபாவில் தொங்கவிடப்பட்ட சிறந்த கவிஞர்களின் அக்கவிதைகள் முஅல்லகாத்கள் (தொங்கவிடப்பட்ட கவிதைகள்) எனப்பட்டன.
- முஅல்லகாத்கள் பிற்காலத்தில் (உமையா) தொகுக்கப்பட்டன.

அறபிலக்கியத்தின் உள்ளடக்கம்

- ஹமாஸா **(الحماسة)** :- அரபிக் கோத்திரங்கள் தமது குலப்பெருமை பற்றியும், போர் வெற்றிகள் பற்றியும் பாடிய வீரக் கவிதைகள்.
- பக்ரு **(الفخر)**: தற்புகழ்ச்சிக் கவிதைகள் : வீரம், கொடை, நாணயம், குலப்பெருமை, அயலவர்களைப் பாதுகாத்தல், விருந்தினரைக் கௌரவித்தல், அபயமளித்தல் போன்றவற்றில் தமது கோத்திரம் சிறந்து விளங்குவது பற்றிய குலப் பெருமை.
- ரஸா **(الرثاء)** கோத்திர வீரனது இழப்பிற்காகப் பாடும் இரங்கற்பா (முகாரி)
- மத்ஹ் **(المدح)**:வீரம், கொடை, நேர்மை, அறிவு முதலிய பண்புகளை புகழ்ந்து பாடும் புகழ்பாக்கள்.
- கஸ்ல் **(الغزل)** காதலர்களின் மன உணர்வுகளை வெளிக்காட்டும் காதற் பாக்கள்
- ஹிஜா **(الهجاء)**: கோத்திரங்கள் ஒன்றையொன்று எதிர்த்துப் பாடும் வசைப்பாக்கள்
- அல் வஸ்பு **(الوصف)**: இயற்கைக் காட்சிகள், குதிரை, ஒட்டகம், போர்க் கருவிகள் என்பவற்றை வர்ணித்துப் பாடும் பாடல்கள்.
- அல் ஹிக்மா **(الحكمة)**: அநுபவத்தின் அடியாகத் தோன்றிய ஞான உரைகள்
- அல் அம்ஸால் **(الأمثال)** : அரேபியர் தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய பழமொழிகள்
- குத்பா **(الخطبة)** : உரைகள்
- **கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.**

**தேர்ச்சி 2.0 : அல்குர்ஆனையும் அதன் கலைகளையும் நயந்து கூறுவார்**

**தேர்ச்சி மட்டம் 2.1 : அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட சூறாக்களின் இலக்கியப் பாங்கினை அறிந்து கூறுவார்**

**2.2 : அல்குர்ஆனின் சூறாக்கள் அருளப்பட்ட பின்னணியை விளக்குவார்.**

**2.3 : சூறாக்கள் உள்ளடக்கியுள்ள கருத்துக்களை விளங்கி தனது மொழியில் எடுத்துரைப்பார்.**

**பாடவேளை : 15**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட ஸுராக்களின் சொல் விளக்கத்தைக் கூறுவார்
- அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட ஸுராக்களின் கருத்தை அறிந்து கூறுவார்
- அல்குர்ஆனில் தெரிவு செய்யப்பட்ட ஸுராக்களை ரசனையோடு நயந்து ஓதுவார்.
- அல்குர்ஆனிய வசனங்களில் காணப்படும் இலக்கியப் போக்கை அறிந்து வெளிப்படுத்துவார்.
- தெரிவு செய்யப்பட்ட சூறாக்கள் அருளப்பட்டதற்கான காரணங்களை அவை அருளப்பட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புறுத்தி விளக்குவார்.
- தெரிவுசெய்யப்பட்ட சூறாக்கள் அருளப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை விளக்குவார்
- அருளப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதேசத்தில் காணப்பட்ட இலக்கியங்களோடு ஒப்பிட்டு விளக்குவார்.
- அறபுச் சொற்களின் கருத்துக்களை விளக்குவார்.
- குர்ஆனிய சொற்களுக்குரிய தனித்துவமான கருத்துக்களை விளக்குவார்.
- குறித்த சொல்லின் மஸ்தரை அறிந்து கூறுவார்.
- ஒவ்வொரு வாக்கியத்தையும் தனது மொழியில் கருத்துச்சிதைவின்றி எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • ஜாஹிலிய்யாக் காலத்தில் சிறந்த இலக்கிய மேதையாகக் கருதப்பட்ட வலீத் பின் முகீறாவிடம் அல்குர்ஆன் பற்றி வினவப்பட்ட போது அவர் அளித்த பதிலை கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்தி அதன் பொருளை எடுத்துச் சொல்வதன் மூலம் பாடத்தை ஆரம்பியுங்கள்

إن لــه لحــلاوة وان عليــه لطــلاوة

وان اعــلاه لمثمــر وان اســفله لمغــدق

انــه يعلــو ولا يعلــى عليــه

- மனிதர்களை நேர்வழிப்படுத்த முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட ஓர் அற்புதமே அல்குர்ஆனாகும்.
- அல்குர்ஆனின் அற்புதத்தன்மைகளுள் அதன் இலக்கியச் சிறப்பும் ஒன்றாகும்.
- ஜாஹிலிலய்யாக் கால அரபுச் சமூகம் தமது மொழிக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுத்திருந்ததால் தலை சிறந்த இலக்கிய விற்பன்னர்களை அது உருவாக்கியிருந்தது.
- அரபு இலக்கிய விற்பன்னர்களை முறியடிக்கும் அளவுக்கு அல்குர்ஆனின் இலக்கியம் சிறப்புற்று விளங்கியமையே அதன் அற்புதமாகும்.
- அல்குர்ஆன் கைதேர்ந்த அரபு இலக்கியவாதிகளை நோக்கி நீங்கள் எத்தனை பேர் சேர்ந்தாயினும் இதுபோன்ற (சில வார்த்தைகளையாவது) ஒரு சூறாவையேனும் எடுத்து வாருங்கள் என்று சவால் விட்ட போது அதை ஏற்று முயற்சித்த அனைவரும் தோல்வியையே தழுவிக் கொண்டனர்.
- அல்குர்ஆனின் இலக்கிய நயத்தை சுவைத்தின்புறுவதற்காக இஸ்லாத்தின் பகிரங்க விரோதிகள் கூட நபியவர்கள் அல்குர்ஆனை ஓதுகின்ற போது அதை நயப்பதற்காக மறைந்திருந்து செவிமடுத்தனர்.
- அல்லாஹ்வுக்கு முன்னால் சிரம் பணிய மறுத்த, பெருமை பிடித்த ஜாஹிலிய்ய தலைவர்கள் அல்குர்ஆனின் ஸஜதாவுடைய வசனம் ஓதப்பட்டபோது தம்மை அறியாமலேயே ஸஜதா செய்தனர்.
- அல்குர்ஆன் வசனங்கள் அற்புதமான ஓசைநயத்தைக் கொண்டமைந்தமை போலவே அதன் வசன ஒழுங்கும் அற்புதமான அமைப்பில் ஒன்றுடன் ஒன்று பொருந்தும் வண்ணம் கச்சிதமான முறையில் கோவை செய்யப்பட்டுள்ளது.
- அல்குர்ஆனின் மொழியமைப்பு அக்கால இலக்கியத்தில் கவிதை மரபையோ, உரைநடை மரபையோ முழுமையாக சார்ந்திருக்காத போதும் கேட்போரையும், வாசிப்போரையும் ஆகர்சிக்கும் அதன் இயல்பு காரணமாக அரபுப் பண்டிதர்கள் வியந்தனர்
- உத்பத் பின் ரபீஆ கூறுகிறார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக முஹம்மதிடமிருந்து நான் ஒரு வார்த்தையைக் கேட்டேன். அதுபோன்ற சிறந்த இலக்கியத்தை இதற்கு முன் நான் எங்குமே கேட்டதில்லை. அது கவிதையுமல்ல; சூனியமும் அல்ல; சோதிடமும் அல்ல. நிச்சயமாக அவ்வார்த்தைக்கு மகத்தான ஒரு கவர்ச்சி இருக்கிறது.
- அல்குர்ஆனிய வசனங்கள், சட்டம், வரலாறு, உபதேசங்கள். ஆதாரங்களை முன்வைத்தல், எச்சரிக்கை விடுத்தல், சோபனம் கூறல் என பல்வேறு விடயப் பரப்புக்குள் சென்றாலும் அதன் வசன அமைப்பு ஒழுங்கு குன்றாமல் அமைந்திருக்கின்றன.

- கால வேறுபாடின்றி, பிரதேச வேறுபாடின்றி, அறிஞர்கள், பாமரர்கள் என்ற வேறுபாடின்றி எல்லாத் தரப்பினரையும் கவரும் வண்ணம் அதன் மொழி நடை அமைந்துள்ளது.
- அற்புத அணியிலக்கியச் சுவைதரும் வண்ணம் தனித்துவமான முறையில் சில சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறியுள்ளது.
- அல்குர்ஆன் சிறிய சொற்களைக் கொண்டு விரிந்த பொருள் தரும் வண்ணம் சொற்களைக் கையாண்டுள்ள விதம், அதன் மற்றோர் அற்புதமாகும்.

  உ-ம் (والأرض بعد ذلك دحاها இதில் **دحاها** எனும் வினைச் சொல்லானது பூமியை நாம் **நகர்த்தினோம்**, **முட்டை வடிவில் படைத்தோம்** ஆகிய இரு பொருள்களைத் தருகின்றது**.** பூமி குறித்து அவ்விரு கருத்துக்களுமே மிகவும் பொருத்தமானவை என்பதை இன்று விஞ்ஞானம் நிரூபித்துள்ளமை அல்குர்ஆனிய சொற்பிரயோகங்கள் மிக ஆழமானவை என்பதை உணர்த்துகின்றது.

- அல்குர்ஆனின் அத்தியாயங்களும் வசனங்களும் மக்கி, மதனி என இரு வகைப்படுகின்றன. அவ்விரு வகையான வசனங்களும் வலியுறுத்தவரும் கருத்துக்கமைய, இருவேறு விதமான இலக்கியப் பாணியைக் கொண்டமைந்துள்ளன.
- நபி(ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்துக்கு முந்திய வசனங்கள் மக்கி வசனங்கள் எனவும் ஹிஜ்ரத்துக்குப் பிந்திய வசனங்கள் மதனி வசனங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- மக்கி வசனங்களின் வாக்கிய அமைப்பும் ஓசை நயமும் ஜாஹிலிய்யத் எனும் அறியாமை இருளில் சிக்கித்தடுமாறும் மனிதனை பலமாய் பற்றிப் பிடித்து ஒளியை நோக்கி இழுத்து வருவது போன்ற புலக்காட்சியை ஏற்படுத்துபவைகளாகும்.
- மக்கி வசனங்கள் பெரும்பாலும் கவிதை இலக்கியத்தை ஓரளவு சார்ந்துள்ளன.
- மதனி வசனங்கள் நீண்ட வசனங்களாக இருப்பதுடன் அவை பெரும்பாலும் சட்ட வசனங்களாகவே அமைந்துள்ளன.
- மதனி வசனங்கள் உரைநடை இலக்கியத்தைச் சார்ந்த போக்கையே கொண்டுள்ளன.
- ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களிடம் அவ்வப்போது அருளப்பட்ட வசனங்கள் அனைத்தையும் இறுதியாக தொகுத்து ஓதிக்காட்டியபோது சில அத்தியாயங்களில் மக்கி, மதனி ஆகிய இருவகை வசனங்களும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.

- அல்குர்ஆனின் இலக்கியச் சிறப்பில் இன்னோர் அம்சம் அது இனிமையாக ஓதக்கூடிய விதத்தில் அமையப்பெற்றுள்ளமையாகும்.
- அல்குர்ஆனை ஓதுவதற்கென்றே உருவாக்கப்பட்ட பிரத்தியேகமான கலை தஜ்வீத் கலை என அழைக்கப்படுகிறது.
- அதிலிருந்து கிராஅத் கலை உருவானது.
- அல்குர்ஆனை ஓதும் போது தஜ்வீத் சட்டதிட்டங்களை முறையாகப் பேணி ஓதும் போது அதன் ஓசைநயம் அற்புதமாக வெளிப்படுவதை அவதானிக்க முடியும்.
- அல்குர்ஆனின் (எல்லா வசனங்களுக்கும் இல்லா விட்டாலும்) அதிகமான வசனங்களுக்கு அவை அருளப்பட்டமைக்கான காரணங்கள் உள்ளன. அவை அஸ்பாபுன்னுஸூல் எனப்படுகின்றன.
- அத்தியாயங்களினதோ வசனங்களினதோ முழுமையான பொருளை அஸ்பாபுன்னுஸூல்களின் பின்னணியில் நோக்கும் போதே தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.
- ஓர் அத்தியாயத்தினுள் வசனங்களுக்கிடையில் உள்ள தொடர்பு பல சந்தர்ப்பங்களில் தெளிவானதாக இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் முபஸ்ஸிரீன்களால் மாத்திரமே புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளன.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- **தேர்ச்சி மட்டம் 2.1இன் பாட உள்ளடக்கத்தில் தரப்பட்டுள்ள 104 முதல் 114 வரையான அத்தியாயங்களைக் கற்பிக்கும் போது பின்வரும் அட்வனையை துணையாகக் கொள்ளலாம்.**

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர்: | الكوثر - எண்ணிறந்த செல்வம் |
| வசனங்களின் எண்ணிக்கை | 3 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மக்கி |
| மையக்கருத்து | நபியவர்களுக்கு ஆறுதலளித்தல் |
| பின்னணி | நபியவர்களின் ஏகத்துவப் பிரசாரத்தால் மக்கள் கவரப்படுவதைத் தடுப்பதற்காக குறைசித் தலைவர்கள் பல்வேறு உபாயங்களைக் கையாண்டனர். இவ்வகையில் நபியவர்கள் ஆண் வாரிசு இல்லாதவர் எனக் குறைகூறி ஏகத்துவக் கொள்கை நிலையற்றது என கதை பரப்பினர். இது நபியவர்களுக்கு மிகுந்த வேதனையளித்தது<br><br>அச்சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்களின் உள்ளத்துக்கு அமைதியும் ஆதரவும் அளித்திடும் வண்ணம் இந்த அத்தியாயம் அருளப்பட்டது. |

| | |
|---|---|
| சொல் விளக்கம் | إنا أعطينك – உமக்கு அருளியுள்ளோம், الكوثر - எண்ணிறந்த செல்வம், وانحر -பலியிடுவீராக, شانئك – உம்மைத்துாற்றுபவன், أبتر- வாரிசற்றவன் (வேரறுந்தவன்) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | ஓசை நயம்: ஒவ்வொரு வசனமும் சுகூன் செய்யப்பட்ட ரா வில் குறில் ஓசையில் முற்றுப்பெறுதல்<br><br>சம வலுக் கொண்ட எதிர்ச் சொற் பிரயோகம்.<br>(கவ்ஸர் என்ற சொல் எந்த அளவு நபியவர்களுக்கு மகிழ்வூட்டியதோ அந்த அளவு அப்தர் என்ற சொல் காபிர்களுக்கு வேதனையளித்தது |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர் | الفيل (யானை) |
| வசனங்களின் எண்ணிக்கை | 5 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மக்கி |
| மையக்கருத்து | காபிர்களின் சூழ்ச்சி முறியடிக்கப்படும் என்ற எச்சரிக்கை |
| பின்னணி | நபி (ஸல்) அவர்களின் நபித்துவ வரலாற்றுக்கு முன்னரே அரபுத் தீபகற்பத்தில் க.்.பாவை இடிக்க வந்த யானைப்படையை அல்லாஹ் அழித்தமை பிரபல்யமான ஒரு வரலாற்று சம்பவம். எனவே நபி (ஸல்) அவர்களை குறைஷிகள் எவ்வளவுதான் எதிர்த்தாலும் க.்.பாவை அப்ரஹாவின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க சக்தி பெற்ற அல்லாஹ் என்றும் நபியையும் அவரோடு இருப்பவர்களையும் பாதுகாப்பான் என்று ஆறுதல் சொல்வதற்காக அருளப்பட்டது போன்றுள்ளது. மேலும் அரபுகள் நன்கறிந்த இச் சம்பவத்தினை நினைவு படுத்தி அல்லாஹ்வுக்கு எதிரான தமது செயற்பாடுகளை குறைஷிகள் கைவிடாது போனால் ஆப்ரஹாவுக்கு ஏற்பட்டது போன்றதே நேரும் என்று உணர்த்துவதாக அமைந்துள்ளது. |
| சொல் விளக்கம் | (ألم تر -நீர் அறியவில்லையா/பார்க்கவில்லையா) (أصحاب الفيل யானைப் படையினர்) (كيدهم -அவர்களது சூழ்ச்சியை) (في تضليل -வழி கேட்டில்) (أبابيل-கூட்டம் கூட்டமாக) (كعصف مأكول -சப்பிப் போடப்பட்ட சக்கைகள் போன்று) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | மிக நீண்டதோர் வரலாற்றை மிகச் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளமை, ஒவ்வொரு வசனத்தினதும் இறுதி எழுத்து லாமில் முடிவடைந்துள்ளமையால் ஒத்த ஓசை நயம் கொண்டுள்ளமை போன்றன.<br>கஅஸ்பின் ம.்.கூல் - சுவை மிகு உவமை |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர்: | ÇáPÑíÔ அல்குறைஷ் |
| வசனங்களின் எண்ணிக்கை | 4 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மக்கி |
| மையக்கருத்து | குறைஷியர்களுக்கு அல்லாஹ் வழங்கிய அருட்பேருகளை நினைவு படுத்தல் |
| பின்னணி | யானைச் சம்பவத்தைத் தொடர்ந்து க∴பாவின் புகழ் அரபு தேசமெங்கும் பரவியது. அரேபியாவின் வட கோடி தேசமான சிரியாவில் மாரியிலும் தென் கோடித் தேசமான யமனில் கோடையிலும் வர்த்தகம் புரிந்த அதன் காவலர்களான குறைஷியர்களுக்கு மிகுந்த பாதுகாப்பும் மரியாதையும் கிடைத்தன. ஆகவே தமது பொருளாதாரத்திலும் பாதுகாப்பிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்திய க∴பாவின் மகிமையை நினைத்தாவது அதன் இரட்சகனை இணைவைக்காது வணங்குமாறு அல்லாஹ் கட்டளையிடுகின்றான். |
| சொல் விளக்கம் | ( لإيــلاف قـــريش - குறைஷியரை விருப்பூட்டியதற்காக) (رحلـــة الشـــتاء -கோடைப் பயணத்தை) (الصـــيف -மாரி) (أطعمهم من جوع - பசிதீர்த்து உணவளித்த) (آمنهم من خوف - அச்சம் தீர்த்து அபயமளித்த) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | ايلافهـــم - முன்னய வசனத்துக்கு பதிலாக வந்த கருத்தை மேலும் வலியுறுத்தகிறது<br>اطعمهم من جوع وآمنهم من خوف ஆகிய இரு சொற்றொடர்களும் பசியும் பயமும் பாலைவன வாழ்வின் இயல்பான பண்பு என்பதை கச்சிதமாக உணர்த்துகின்றன.<br>كعصـــف مـــأكول - சுவை மிகு உவமை |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர்: | المـــاؤون |
| வசனங்களின் எண்ணிக்கை | 7 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | சிலர் மக்காவில் இறங்கியதென்கின்றனர். இன்னும் சிலர் மதீனாவில் இறங்கியதென்கின்றனர். முதல் மூன்று வசனங்களும் மக்காவிற்குரியதென்றும் பின்னய நான்கு வசனங்களும் மதீனாவிற்குரியதென்றும் வேறு சிலர் கூறுகின்றனர் |
| மையக்கருத்து | நம்பிக்கையையும் சமூக வாழ்வையும் தொடர்புபடுத்துதல் |

| | |
|---|---|
| பின்னணி | மதீனாவில் இஸ்லாம் செல்வாக்குப் பெற்றதும் சிலர் சமய அனுஷ்டானங்களை வெளிக்காட்டி சமூகத் தொண்டைப் புறக்கணித்து சுயநலமிகளாக இருக்க முயன்றனர். அது நயவஞ்சகப் பண்பு என்பதை சுட்டிக்காட்டி, மறுமை நம் பிக்கையுடன் பிணைக்கப்பட்டுள்ள முஸ்லிம், சமூகத்தின் அற்பத் தேவையிலும் பங்கு கொள்பவனாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. |
| சொல் விளக்கம் | ( أرأيت - நீர் பார்த்தீரா) (الدين -மார்க்கம், மறுமை) (يدع - விரட்டுகிறான்)(ولا يحض -தூண்டுவதில்லை (ساهون - கவனமற்றிருப்போர்) (يراؤون -காண்பிப்போர்)(ماؤون - அற்பப்பொருள்) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜுமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | أرأيت எழிய இவ்வினாவானது வஞ்சக மனதுடையோரின் பொய்மையை காட்சிப்படுத்தும் விதம்.<br>فويل للمصلين - உன்மையான தொழுகையாளிகளைக் கூட ஒரு கணம் நிறுத்தி சுயவிசாரணைக்குட் படுத்தும் வலிமை மிகு சொல்லாட்சி |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர்: | الكافرون |
| வசனங்களின் எண்ணிக்கை | 6 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மக்காக் கால கட்டம் |
| மையக்கருத்து | ஈமானுக்கும் குப்ருக்கும் இடையில் சமரசம் கிடையாது |
| பின்னணி | சிலை வணக்கத்திற் கெதிரான நபியவர்களின் பிரச்சாரத்தை<br>பலவீனப்படுத்துவதற்காக குறைசிகள் நபியவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து சிலை வணக்கத்துக்கும் ஏகத்துவத்துக்கும் இடையே சமரசமேற்படுத்த முனைந்த போது அதை எவ்விதக் காய்தல் உவத்தலுமின்றி நிராகரிப்பதற்காக அருளப்பட்டது. |
| சொல் விளக்கம் | (لا أعبد -நான் வணங்க மாட்டேன்) (ما تعبدون - நீங்கள் வணங்குபவற்றை) (لا أنتم عابدون-நீங்கள் வணங்குபவர்களல்ல) (لا أنا عابد -நான் வணங்குபவனல்லன்) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |

| | |
|---|---|
| இலக்கிய நயம் | ஒவ்வொரு ஆயத்தும் நூனுஸ்ஸாகினாவில் முற்றுப் பெறு வதன் மூலம் ஓசை நயம் பேணப்படல்.<br><br>ஒரு மூலச் சொல்லிலிருந்து பிறந்த பல சொற்கள் திரும்பத் திரும்ப பலவடிவங்களில் வந்துள்ளமையும் அவற்றின் ஒத்திசைவான ஓசை நயமும்.<br><br>தக்ரீர் மூலம் மீள வரியுறுத்தப்படல்.<br><br>(லா அ.ஃபுது-நான் (எதிர்காலத்திலும்) வணங்குவதில்லை) (வலா அன்தும் ஆபிதூன் - நீங்கள் (நிகழ்காலத்தில்) வணங்குவதில்லை) இவ்வசனம் குறைசியர்களின் சிலைகளுக்கு எதிர்காலமில்லை என்பதை நுணுக்கமாக விளக்குகிறது. |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர் | النصر (உதவி) |
| வசனங்களின் எண்ணிக்கை | 3 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மதீனாக் காலம் |
| மையக்கருத்து | நபியவர்களின் பணி முழுமை பெற்றதற்கான அறிவிப்பு |
| பின்னணி | தனித்த ஒருவராய் நின்று பிரச்சாரத்தை ஆரம்பித்த நபியவர்கள் மக்கா வாசிகளின் கடும் எதிர்பபுக்காரணமாக அதை விட்டும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்று பின் 8 வருடங்களில் மக்காவை வெற்றி கொண்டு அனைத்து சிலைகளிலிருந்தும் க.ஃபாவைத் தூய்மைப்படுத்தியபின் மக்கா வாசிகள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைய ஆரம்பித்தனர். இறுதி ஹஜ்ஜில் மினாவில் இருக்கும் போது தனது ரிஸாலத் பணியை பூர்த்தி செய்த தூதரை அவரை அனுப்பிய அல்லாஹ்வை சந்திக்கத் தயாராகும்படி உணர்த்தும் பாணியில் அருளப்பட்டுள்து. |
| சொல் விளக்கம் | (إِذَا جَاءَ - வந்தால்) ( نَصْرُ اللهِ -அல்லாஹ்வின் உதவி)) (أفواجا -கூட்டம் கூட்டமாக) (فسبح -எனவே துதி செய்யுங்கள்)(توابا -மிகவும் மன்னிப்பவன்) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர் | لهب (தீச்சுவாலை) |
| வசனங்களின் எண்ணிக்கை | 5 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மக்காக் காலம் |
| மையக்கருத்து | அபூலஹபையும் அவனது மனைவியையும் எச்சரித்தல் |
| பின்னணி | பகிரங்கமாகவே இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுக்குமாறு அல்லாஹ்வின் கட்டளை வந்ததும் நபியவர்கள் காலை நேரத்தில் ஸபா மலைக்குன்றில் ஏறி யா ஸபாஹா எனக் கூவி தன் குடும்பத்தாரை மலை அடிவாரத்திற்கு அழைத்து தன் மீது அவர்களுக்கிருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டபின் மறுமை பற்றி எச்சரிக்கை செய்தார்கள். இதைக் கேட்ட நபியவர்களின் பெரிய தந்தையாகிய அபூலஹப் இதற்காகவா எம்மை இங்கு நீர் அழைத்தீர் எனக்கூறி நபியவர்களைக் கடுமையாகச் சாடினான். அதன் பின் தொடர்ந்தும் அவன் நபியவர்களை நோவினை செய்து கொண்டே வந்தான். அவனது மனைவியாகிய உம்மு ஜமீல் முற்செடி கொடிகளை சுமந்து வந்து நபியவர்களின் வீட்டு வாசலில் போடுவாள். இதனால் நபியவர்கள் பல்வேறு இடர்களுக்கு உள்ளாகினர். இந்நிலையில் அபூலஹபையும் அவனது மனைவியையும் கண்டித்து இவ்வசனம் அருளப்பட்டது. |
| சொல் விளக்கம் | (تَبَّتْ -நாசமாகட்டும்) (ما أغنى -பயனளிக்கவில்லை) (سيصلى نارا - நரகில் நுழைவான்) (ذات لهب - கடும் சுவாலை உடைய) (حمالة الحطب -விறகு சுமப்பவள்) (في جيدها -அவளது கழுத்தில்) (مسد -முறுக்கப்பட்ட) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | தப்பத் - வதப்பத் (உச்ச அளவிலான கண்டனத்தை வெளிக்காட்டுகிறது)<br>வசனம் ஒவ்வொன்றும் (ப்)கல்கலாவில் முடிவுற்றுள்ளமை கண்டனத்திற்கேற்ற வள்ளின ஓசையினை வழங்குகிறது |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர் | الإخلاص (உளத் தூய்மை) |
| வசனங்களின் எண்ணிக்கை | 4 |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மக்காக் காலம் |

| | |
|---|---|
| மையக்கருத்து | ஏகத்துவம் |
| பின்னணி | நபியவர்களின் ஏகத்துவப் பிரசசாரத்தின் போது சில முஷ்ரிக்குகளும் யூத கிறிஸ்த்தவர்களும் அல்லாஹ்வின் தந்தை பற்றியும் பிள்ளைகள் பற்றியும் விளக்கம் கேட்டனர். அதற்குப் பதிலாகவே இந்த அத்தியாயம் அருளப்படுகிறது. |
| சொல் விளக்கம் | (أحد-ஏகன்) (الصـــمد-தேவையற்றவன்) (كفــوا -நிகரானது) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜுமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | அஹத் : ஒருவன் என்ற கருத்தைத் தரும் மிகவும் தனித்துவமான சொல். (வாஹித், அவ்வல் ஆகிய சொற்கள் ஒன்று என்ற கருத்தைத் தரினும் அவற்றை இஸ்னான். ஸலாஸா அல்லது الثـــانى ,الثالـــث என தொடர்ந்து எண்ண முடியும்.<br>ஆனால் அஹத் என்ற சொல்லுக்கு அடுத்து இது போன்ற தொடர் எண்கள் எதுவும் கிடையாது<br>அனைத்து வசனங்களும் சுகூன் வைக்கப்பட்ட "الـدال" மூலம் கல்கலா பெறுவதால் சிறப்பான ஓசைநயம் பேணப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் பெயர் | الفلـــق (வைகரை), النـــاس (மனிதர்கள்) இரு அத்தியாயங்களுக்குமான பொதுவான பெயர் - معـــوذتين |
| வசனங்களின் எண்ணிக்கை | (الفلـــق -5) (النـــاس -6) |
| அருளப்பட்ட காலப்பிரிவு | மதீனாக் காலம். |
| மையக்கருத்து | அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடல் |
| பின்னணி | மக்காக் காபிர்களுக்கு நபியவர்கள் மீது ஏற்பட்ட கோபம் காரணமாக அவருக்கு தொல்லைகள் கொடுத்தது போலவே மதீனாவில் நபியவர்கள் செல்வாக்குப் பெற்றதும் அவர்கள் மீது பலரும் பொறாமைப்பட்டனர். நபியவர்களை வீழ்த்துவதற்காக சூனியம் போன்ற பல்வேறு சூழ்ச்சிகளை செய்தனர். அதன் விளைவாக நபியவர்கள் சில அசௌகரியங்களுக்கு உள்ளானார்கள். அதிலிருந்து மீள்வதற்காக இவ்விரு அத்தியாயங்களையும் அல்லாஹ் அவருக்குக் அருளாகக்கொடுத்தான். |
| சொல் விளக்கம் | (الفلـــق -வைகரைப் பொழுது) (شــر-தீங்கு) (غاسـق - இரவு) (نفّثـــات فـــى العقـــد -முடிச்சுக்களில் ஊதும் மாயக்காரப் பெண்கள்) (حاســد - பொறாமைக்காரன்) (إذا حســد - |

| | |
|---|---|
| | பொறாமைப் பட்டால்) (أعوذ - பாதுகாப்புத் தேடுகிறேன்) (الوسواس - வீண் சந்தேகம்) (الخناس - தோன்றித் தோன்றி மறைபவன்) (يوسوس -சந்தேகங் களைக் கிளப்புகிறான்) (صدور الناس - மனித உள் ளங்கள்) (من الجنة والناس மனிதர்களிலும் உள்ளனர், ஜின்களிலும் உள்ளனர்) |
| மொழி பெயர்ப்பு | (அப்துல் ஹமீத் பாகவியின் தர்ஜமாவில் உள்ள மொழிபெயர்ப்பை வழங்கவும்.) |
| இலக்கிய நயம் | முதல் அத்தியாயத்தின் ஒவ்வொரு வசனமும் கல்கலாவில் முற்றுப் பெறுவதால் சீரான ஓசைநயம் பேணப்பட்டுள்ளது இரண்டாவது அத்தியாயம் அதில் உள்ள ஒவ்வொரு வசனமும் சுகூன் செய்யப்பட்ட ஸீனில் முடிவதால் சீரான ஓசை நயமும், இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நூனும் உன்னா எனும் இராகத்தைத் தருவதனால் இனிமையும் கொண்டதாய் அமைந்துள்ளது. |

**தேர்ச்சி 3.0 : ஹதீஸ்களை இலக்கியச் சுவையோடு நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : ஹதீஸ்களில் உள்ளடங்கியுள்ள இலக்கியப்பாங்கை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 8**

**கற்றல் பேறுகள்:**

- தெரிவு செய்யப்பட்ட ஹதீஸ்களின் சொல்விளக்கத்தைக் கூறுவார்.
- அந்த ஹதீஸ்களின் கருத்தை தனது மொழியில் எடுத்துரைப்பார்.
- ஹதீஸ்களில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டுவார்.
- அந்த ஹதீஸ்கள் எடுத்துக் கூறும் போதனைகளை தமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • مَثَلُ القَائِمِ فِى حُدُودِ اللهِ والوَاقِعِ فِيهَا كَمَثَلِ
قَومٍ اسْتَهَمُوا عَلَى سَفِينَةٍ فَصَارَ بَعْضُهُمْ اعلاهَا
وَبعضُهُمْ اسْفَلَهَا فَكَانَ الذى فى اسْفَلِهَا اذا اسْتَقَوا
مِنَ المَاءِ مَرُّوا عَلَى مَن فَوقَهُمْ فقَالُوا لو أنَّا خَرَقْنَا
فِى نَصِيبِنَا خَرْقًا وَلَمْ نُؤذِ مَنْ فَوقَنَا فَإنْ
تَرَكُوهُم وَمَا أرَادُو هَلَكُوا جَمِيعًا وَإنْ أخَذُوا عَلَى
أيديهم نَجَوْا وَنَجَوْا جَمِيعا

அல்லாஹ்வுடைய கட்டளைக்கு உட்பட்டு நடப்பவர்களுக்கும் அவற்றை மீறுபவர்களுக்கும் (கப்பலில் பயணம் செய்யும்) ஒரு கூட்டத்தினர் உதாரணமாவர். சிலர் மேல் தளத்திலும் சிலர் கீழ்த்தளத்திலும் இருக்கிறார்கள். கீழ்த்தளத்தில் இருப்பவர்கள் தண்ணீர் தேவைப்பட்டால் மேல் தளத்திற்கு வர வேண்டும். இவ்வாறிருக்க கீழ்த்தளத்தில் இருப்பவர்கள் ''நாம் தண்ணீர் எடுக்க மேலே செல்வதால், அவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. கப்பலுக்கு அடியில்தான் நிறைய தண்ணீர் இருக்கிறதே! நாம் கப்பலின் கீழ்த்தளத்தில் ஒரு துவாரமிட்டுக் கொண்டால் கடலிலிருந்து தேவையான அளவு தண்ணீரைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள்.

இப்போது மேலே இருப்பவர்கள், கீழ்த்தளத்தில் உள்ள அறிவீனர்களின் இந்த வேலையைப் பார்த்து, 'நமக்கென்ன? இது அவர்களுடைய வேலை என்று கருதி, தடுக்காமல் விட்டுவிட்டால் கப்பல் மூழ்கி, இரு தரப்பினரும் அழிந்து விடுவார்கள். ஆனால் மேலே இருப்பவர்கள் இவர்களை தடுத்து நிறுத்தினால் இரண்டு தரப்பினரும் தப்பித்துக் கொள்வார்கள் (புகாரி)

- இந்த ஹதீஸை சம்பவமாக எடுத்துக் கூறி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- ஹதீஸ், வஹியின் அடியாக கிடைத்தது என்ற அடிப்படையில் ஹதீஸ் என்றால் என்ன என்பதை விளக்குங்கள்.

- ஹதீஸ்கள் சொற் சுருக்கமும் கருத்துச் செறிவும் மிக்கவை; உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை; அழகிய, ஆற்றொழுக்கான நடை கொண்டவை; உள்ளத்தை வசீகரிக்கும் தன்மை உடையவை; இவை அதன் இலக்கிய நயத்திற்கும் ரசனைக்கும் காரணங்களாக அமைகின்றன.

- கப்பல் பயணிகளுக்கு உவமித்த இந்த ஹதீஸ், அழகிய, எளிய உவமானம் ஒன்றின் மூலம் பெரியதொரு செய்தியைக் கதைவடிவில், இலகுவாகவும், உள்ளத்தை உறுத்தக்கூடியதாகவும் முன்வைக்கின்றது.

- தீமையைக் கண்டு அசட்டுத் தனமாய் இருப்பது கூடாது. அதனைத் தடுப்பது கடமை. அதனைச் செய்யாத போது எல்லோரும் அழிய நேரிடும் என்பதை உவமானம் மூலம் இந்த ஹதீஸ் எடுத்துக் காட்டுகின்றது. ஒத்த ஓசை கொண்ட சொற்கள், வாக்கிய அமைப்பு என்பன இலக்கிய ரசனைக்கு அணிசேர்க்கின்றன. உதாரணம் :

هَلَكُــــوا جَمِيعًــــا   نَجَــــوْا جَمِيعــــا

اعلاهَــــا اسْــــفلَهَا

- இணைப்பு 3.1.1 இல் வழங்கப்பட்டுள்ள ஹதீஸ்களை, அவற்றின் பதவிளக்கத்துடன், மொழி பெயர்ப்பையும் வழங்கி, அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களையும் எடுத்துக்காட்டி, அவை தரும் போதனைகளையும் சுட்டிக்காட்டி விளக்கமளியுங்கள்.

■ கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அரும்பதங்கள்

| | |
|---|---|
| اسْــــتَهَمَ | பயணம் செய்தான் |
| سَــــفِينَةٌ | கப்பல் |
| أعلاها | அதன் மேலே |
| اسْــــفلَهَا | அதன் கீழே |

| | |
|---|---|
| إذا اِسْتَقَى | தண்ணீர் தேவைப்பட்டால் |
| خَرَقَ | துளையிட்டான் |
| هَلَكُوا | அழிந்தனர் |
| نَجَوا | தப்பினர் |
| جَمِيعًا | அனைவரும் |

**இணைப்பு : 3.1.1**

01 مثلُ المُؤْمِنِينَ فِى تَوَادِّهِمْ , وَتَرَاحُمِهِمْ, وَتَعَاطُفِهِم,
كَمَثَلِ الجَسدِ إذا اشْتَكى مِنْهُ عُضْوٌ تَدَاعَى لَهُ سَائِرُ
الجَسدِ بِالسَّهْرِ والحمَّى

02
كَبُرَتْ خِيَانَةً أنْ تُحَدِّثَ أخَاكَ حَدِيثًا هُوَ لَكَ بِهِ
مُصَدِّقٌ وَأنْتَ لَهُ بِهِ كَاذِبٌ

03
إنَّمَا الإثْمُ مَا حَاكَ فِى صَدْرِكَ وَكَرِهْتَ أنْ يَطَّلِعَ
عَلَيْهِ النَّاس

،

04
احفظ اللهَ يحفظك احْفَظِ اللهَ تَجِدْهُ تُجَاهَكَ, إذَا
سَألْتَ فَاسْألِ اللهَ, وَإذَا إسْتَعَنْتَ فَاسْتَعِنْ
بِاللهِ, وَاعْلَمْ أنَّ الأمَّةَ لوجْتَمَعَتْ عَلى أنْ
يَنْفَعُوكَ بِشَيءٍ لَمْ لو اجتمعت إلا بِمَا كَتَبَهُ
اللهُ لَكَ, وَلَوْ اجْتَمَعَتْ على أنْ يَضُرُّوكَ
بِشَيءٍ, لَمْ يَضُرُّوكَ إلا بِشَيءٍ كَتَبَهُ اللهُ
عَلَيكَ, جَفَّتِ الأقْلامُ, وَطُوِيَتِ الصُّحُفُ

05
ارأيتم لَوْ أنَّ نَهْرًا بِبَابِ أحَدِكُمْ يَغْتَسِلُ فِيْهِ
كُلَّ يَوْمٍ خَمْسَ مَرَّاتٍ هَلْ يَبْقَى مِنْ دَرَنِهِ
شَيْءٌ قَالُوا لا يَبْقَى مِنْ دَرَنِهِ شَيءٌ قَالَ
فَكَذَلِكَ مَثَلُ الصَّلوَاتِ الخَمْس يَمْحُو اللهُ بِهِن
الخَطَايَا

**தேர்ச்சி 4.0 : தஜ்வீத் கலையையும் அதன் உள்ளடக்கத்தையும் நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : தெரிவு செய்யப்பட்ட சூறாக்களுக்கூடாக அல்குர்ஆனை ஓதுவதற்கான சட்டங்களையும் முறைகளையும் அறிந்து முறைப்படி ஓதிக்காட்டுவார்.**

**பாடவேளை : 15**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஒழுங்காக ஓதக்கற்றுக் கொள்வார்.
- தஜ்வீத் சட்டங்களை விளங்கிக் கூறுவார்
- தெரிவு செய்யப்பட்ட சூறாக்களில் உள்ள தஜ்வீத் சட்டங்களை இனங்கண்டு கூறுவார்
- தஜ்வீத் சட்டங்களை அனுசரித்து ஓதுவதன் மூலம் குர்ஆனின் இலக்கிய நயத்தை ரசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

:
- பிரபலமான காரி ஒருவரின் கிராஅத்தை ஒலி நாடாவில் இயக்கிக் காட்டி, கிராஅத்தின் இனிமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- அல்குர்ஆனை பிழையின்றி இனிமையாகவும் ரசனையோடும் ஓதுவதற்காக உருவாக்கப்பட்ட ஓர் அழகியற் கலையே தஜ்வீத் கலையாகும்.
- தஜ்வீத் கலை அல்குர்ஆனுக்கு மாத்திரமே உரிய கலை என்ற வகையில் பொதுவான பாடல்களுக்குரிய இசையமைப்பில் இருந்து அல்குர்ஆனை ஓதுதல், வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.
- தஜ்வீத் கலையில் உன்னா (சுகூன் வைக்கப்பட்ட நூனில் ராகமெடுத்தல்), மத்து (நீட்டுதல்) முபஹ்கம் முரக்கக் (வல்லினம் மெல்லினம்) ஆகியன முக்கிய தலைப்புக்களாகும்.
- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் தொடர்பில் நான்கு சட்டங்கள் முக்கியம் பெறுகின்றன.
- அவை அஹ்காமுன் நூனுஸ்ஸாகினா வத்தன்வீன் என வழங்கப்படுகின்றன.

- அரபு எழுத்துக்கள் அவற்றுக்கு முன்னால் வரும் சுகூன் வைக்கப்பட்ட நூனிலும், தன்வீனிலும் ஏற்படுத்தும் ஓசை நய வேறுபாட்டுக்கமைய 28 அறபெழுத்துக்களையும் 4 தொகுதிகளாக வகைப்படுத்தலாம்.

| இக்லாப் | இத்ஆம் | இழ்ஹார் | இக்பாஉ |
|---|---|---|---|
| الإقــلاب | الإدغام | الإظهار | الإخفـــاء |
| 1 எழுத்து | 6 எழுத்துக்கள் | 6 எழுத்துக்கள் | 15 எழுத்துக்கள் |
| (ب) | (يــرملون) | (أ ع غ ح خ هـ) | (ص ث ذ ك ج ش<br>ق س<br>د ط ز<br>فــى د ض ظ) |

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றை தெளிவாக வெளிபடுத்திக் காட்டும் எழுத்துகள் 6. இவை இழ்ஹாருடைய எழுத்துக்கள் எனப்படுகின்றன. இவ் ஆறு எழுத்துக்களினதும் ஒலி, தொண்டையிலிருந்து பிறப்பதனால் அவை ஹுரூபுல் ஹல்க் எனவும் அழைக்கப்படுகின்றன.

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றிற்குப் பின் இவ்வெழுத்துக்களுள் ஏதாவது ஒன்று வந்தால் சுகூன் வைக்கப்பட்ட நூனை அல்லது தன்வீனை (உன்னா) இராகமின்றி வெளிப்படுத்தி ஓத வேண்டும்.

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றை மறைக்கும் எழுத்துக்கள் 15. இவை இக்பாவுடைய எழுத்துக்கள் எனப்படுகின்றன.

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றிற்குப் பின் இவ்வெழுத்துக்களுள் ஏதாவது ஒன்று வந்தால் சுகூன் வைக்கப்பட்ட நூனை அல்லது தன்வீனை மறைத்து (உன்னாவுடன்) இராகத்துடன் ஓத வேண்டும்.

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றை உள்வாங்கும் எழுத்துகள் 6. இவை இத்ஆமுடைய எழுத்துக்கள் எனப்படுகின்றன.

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றிற்குப் பின் இவ்வெழுத்துக்களுள் ஏதாவது ஒன்று வந்தால் சுகூன் வைக்கப்பட்ட நூனை அல்லது தன்வீனை, குறித்த எழுத்தினுள் நுழைத்து ஓத வேண்டும்.

- அவ்வாறு நுழைத்து ஓதும் போது ادغام بغنة, ادغام بلا غنة ஆகிய இரு விடயங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றிற்கு மீம் சத்தத்தைக் கொடுக்கும் ஓர் எழுத்தும் உள்ளது. இது இக்லாபுடைய எழுத்து எனப்படுகின்றது

- சுகூன் வைக்கப்பட்ட நூன், தன்வீன் ஆகியவற்றிற்குப் பின் இவ்வெழுத்து வந்தால் சுகூன் வைக்கப்பட்ட நூனை அல்லது தன்வீனை மீம் சத்தத்திற்கு மாற்றி இராகத்துடன் ஓத வேண்டும்.

- 104 முதல் 114 வரையான சிறிய ஸூராக்களிலும் வேறு பல இடங்களிலும் இந்நான்கு சட்டங்களும் இடம் பெற்றுள்ளன. அவற்றை அனுசரித்து ஓத மாணவர்களை பயிற்றுவியுங்கள்.
- **கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.**

**தேர்ச்சி 5.0 : அன்றாட துஆக்களை அறிந்து அதனை நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஓத வேண்டிய துஆக்களை இனங்கண்டு அவற்றைத் தினமும் பொருளறிந்து நயந்து விளங்கி ஓதுவார்.**

**பாடவேளை : 8**

**கற்றல் பேறுகள்:**

- அன்றாடம் ஓத வேண்டிய துஆக்களை அறிந்து கூறுவார்.
- அவற்றின் பொருளை எடுத்துக்காட்டுவார்.
- அவற்றின் கருத்துக்களை கண்டறிந்து நயந்து கூறுவார்.
- அவற்றில் காணப்படும் மொழிசார் அணி நலன்களை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • அன்றாடம் மாணவர்கள் ஓதி வருகின்ற அவர்களுக்கு பரீட்சயமான துஆக்கள் சிலவற்றை அவர்களிடம் வினவி, அவற்றை ஓதும் சந்தர்ப்பங்களையும் கேட்டறிந்து பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- நாளாந்தம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஓதுவதற்கான துஆக்களை நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.

  உ-ம் : உண்ணு முன்னர், ஆடை அணியும் போது, ஆடை களையும் போது, மணமக்களை வாழ்த்தும் போது, பள்ளியில் நுழையும் போது.....

- அந்த துஆக்கள் யாவும், குறுகிய சொற்கள் கொண்டமைந்த நிறைவான கருத்துக்களை தருகின்றனவாகும். அவற்றை ஓதுவதனால் நன்மைகளும் சுவையும் கிடைக்கின்றன.
- அவற்றை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓதுவதனால் இறை நினைவு ஏற்படுகின்றது. அடியான் பாவங்கள் செய்வதிலிருந்து தவிர்ந்து வாழவும் நன்மையின் பால் தூண்டப்படவும் அவை காரணமாக அமைகின்றன.
- மூன்று துஆக்களை உதாரணமாக நோக்குவோம்.

  பயணம் செய்பவர்களுக்காக வழியனுப்புவோர் ஓதும் துஆ

  உ-ம் :

زودك الله التقوى, وغفر ذنبك ويسر لك الخير
حيث ما كنت

"அல்லாஹ் பயபக்தியை உமக்கு பயணச் சாதனமாக்குவானாக! மேலும் உமது பாவத்தை மன்னிப்பானாக. நீ எங்கிருந்தாலும் நன்மையை உமக்கு எளிதாக்குவானாக"

- வழியனுப்பும் போது ஓதும் இந்த துஆ, பிரார்த்தனையாக அமைந்துள்ளது. குறுகிய சொற்களில் ஒருவரது வாழ்வுக்கு விமோசனத்தைத் தேடித்தரும் தக்வா, பாவமன்னிப்பு, நற் செயல் புரிதல் ஆகியவற்றை அல்லாஹ்விடம் வேண்டி பிரார்த்தித்து, வாழ்த்தி வழியனுப்புவதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது.

பயணத்திலிருந்து திரும்பி வரும் போது

உ-ம் :

آيِبُـــــونَ تَـــــائِبُونَ عَابِـــــدُونَ لِرَبِّنَـــــا حَامِـــــدُونَ

"நாம் திரும்பி வருகின்றோம். பாவமன்னிப்பு தேடுகின்றோம். நம் இரட்சகனை புகழக்கூடியவனாகவும் இருக்கின்றோம்."

- ஒரே வகையான ஓசை நயம் கொண்டமைந்த இந்த துஆ பயணத்தின் முடிவில், பாவமன்னிப்பை வேண்டக் கற்றுத் தருகின்றது. பயணத்தில் இடம் பெற்ற பாவங்களுக்கு பரிகாரமாகிறது. மேலும் பயணத்திலிருந்து பாதுகாப்பாக திரும்பக் கிடைத்தமைக்கு அவனுக்கு நன்றியை வெளிப்படுத்துவதாக இறுதிப் பகுதி அமைந்துள்ளது.

உதாரணம் : நோயாளியை நலம் விசாரிக்கும் போது

أَسْــــأَلُ اللهَ الْعَظِيــــمَ رَبَّ الْعَــــرْشِ الْعَظِيــــمْ ان يَشْــــفِيكَ

"மகத்தான அல்லாஹ்விடம், மகத்தான அர்ஷின் அதிபதியிடம் நான் இறைஞ்சுகிறேன். அவன் உனக்கு சுகமளித்திட வேண்டும்."

இது ஓசை நயம் கொண்டமைந்த பரந்த கருத்தை தரும் ஓர் பிரார்த்தனையாக, ஆறுதல் வார்த்தையாக அமைந்துள்ளது.

- சொற்களில் உள்ள ஒத்த தன்மைகளை எடுத்துக்காட்டுவதற்கூடாக விளக்கமளிக்கல்

زود ـــ وغفر ـــ ويسّرَ ـــ آيِبُـــونَ ـــ تَائِبُـــونَ ـــ عَابِـــدُونَ ـــ
حَامِـــدُونَ ـــ الله العظيـــم ـــ رب العَـــرْشِ العَظِيـــم

- இணைப்பு 5.1.1 இல் தரப்பட்டுள்ள துஆக்களை முதலில் பத ரீதியாக விளக்கி, அதன் முழுமையான கருத்தை தெளிவுபடுத்தி

அவை ஓதப்படும் சந்தர்ப்பங்கள், அவற்றில் காணப்படும் இலக்கிய அம்சங்கள் போன்றவற்றையும் எடுத்துக் காட்டி விளக்கமளியுங்கள்.

- கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

- அரும் பதங்கள்

| | |
|---|---|
| زودك | : உமக்கு பயணச்சாதனமாக்கினான் |
| التقــــوى | : இறையச்சம் |
| غفـــرَ | : மன்னித்தான் |
| يَسَّــــــرَ | : எளிதாக்கினான் |
| آئبــــون | : திரும்பிவருவோர் |
| تـــــائبون | : பாவமன்னிப்பு கேட்போர் |
| حامدون | : புகழ்வோர் |
| عابـــدون | : வணங்குவோர் |
| أسَـــــأل الله | : அல்லாஹ்விடம் கேட்கிறேன். |
| العَظِيـــــم | : மகத்தானவன் |
| العَــرش | : அர்ஷ் |
| يشـــــفى | : குணப்படுத்துகின்றான். |

**இணைப்பு : 5.1.1**

01. உறக்கத்திலிருந்து விழித்தெழுந்ததும் ஓதும் துஆ

**الحمــد لله الــذى احيانـــا بعـــد مـــا اماتنـــا وإليـــه النشـــور**

02. ஆடை அணியும் போது

**الحمـد لله الـذى كسـاني هـذا الثـوب ورزقنيـه مـن غـير حـول مـنى ولا قـوة**

03. வுழு செய்த பின்

**اللهـــم اجعلـــني مـــن التـــوابين واجعلـــني مـــن المتطهـــرين**

04. வீட்டில் நுழையும் போது

**بســـــم الله ولجنـــا وبســـم الله خرجنـــا وعلــــى الله ربنـــا توكلنـــا**

05. உணவளித்தவருக்கு விருந்தின் பின் ஓதும் துஆ

**اللهـم اطعـم مـن اطعمـنى واسـق مـن سـقاني**

06. கவலை நீங்க ஓதும் துஆ

اللهم إنى أعوذ بك من الهم والحزن و اعوذ بك من العجز والكسل وأعوذ بك من الجبن والبخل وأعوذ بك من غلبة الدين وقهر الرجال

07. கழிவறையில் நுழையும் போது ஓதும் துஆ

اللهم إنى أعوذ بك من الخبث والخبائث

08. உணவு உண்ண முன் ஓதும் துஆ

اللهم بارك لنا فيما رزقتنا وقنا عذاب النار بسم الله

09. பால் குடித்து முடிந்ததும் ஓதும் துஆ

اللهم بارك لنا فيه وزدنا منه

10. பள்ளியில் நுழையும் போது ஓதும் துஆ

اللهم افتح لي ابواب رحمتك

**தேர்ச்சி 5.0 : அன்றாட துஆக்களை அறிந்து அதனை நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : அவற்றின் இலக்கிய நயங்களைக் கண்டறிந்து எழுதுவார்.**

**பாடவேளை : 3**

**கற்றல் பேறுகள்:**

- துஆக்களில் காணப்படும் பொருள்சார் அணிகளை எடுத்துக் காட்டுவார்.
- அவற்றில் காணப்படும் ஏனைய இலக்கிய நயங்களைத் திறனாய்ந்து கூறுவார்.
- அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • மாணவர்கள் வழக்கமாக ஓதிவரும் காலை மாலை துஆக்கள் பற்றி கேட்டறிந்து பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- காலை மாலையில் ஓதக்கூடிய துஆக்களில் ஒன்றான கீழ்வரும் துஆவை ஓதிக்காட்டி அதன் பொருளை விளக்குங்கள்

اللهــمَّ عَــافِنى فــى بــدنى اللهــم عــافِنى فــى ســمعى, اللهــم
عــافِنى فــى بصــرى

யா அல்லாஹ்! எனது உடல்ல் நலன் அருள்வாயாக

யா அல்லாஹ் எனது செவிப்புலனில் நலன் அருள்வாயாக

யா அல்லாஹ் எனது பார்வையில் நலன் அருள்வாயாக

- மனிதன் தன் உடல் நலன் வேண்டி பிரார்த்திக்கும் இந்த துஆவில் குறிப்பாக செவிப்புலன், கட்புலன்களின் நலன் வேண்டியும் பிரார்த்திக்கக் கற்றுத் தருகின்றது.
- இங்கு பொதுவான ஒன்றைச் சொல்லிவிட்டு (உடல்) பின்னர் குறிப்பாக சிலவற்றை (கேள்வி,பார்வை) சொல்லும் மரபு கையாளப்பட்டுள்ளது.
- பௌதிக உடலின் ஆரோக்கியத்துடன், அறிவு பெற மூலமாக அமைந்துள்ள பார்வை, கேள்வி என்ற புலன்களின் ஆரோக்கியம் வேண்டியும் பிரார்த்திக்க கற்றுத் தந்துள்ளமை சிறப்பம்சமாகும்.
- இந்த துஆவின் சொல்லாட்சியும், ஓசை நயமும் ஒத்து அமைந்துள்ளன. உதாரணம் :

فــى بــدنى
فــى ســمعى
فــى بصــرى

- இதன் உச்சரிப்பானது ஒத்த தன்மையுடனும் இலாவகமாகவும் அமைந்துள்ளமை செவிமடுப்போரை ஈர்க்க கூடியதாய் உள்ளது.
- இணைப்பு 5.2.1 வழங்கப்பட்டுள்ள துஆக்களையும் அவற்றின் மொழிபெயர்ப்பு, பொருள்கள், அணி, ஏனைய இலக்கிய நயங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்கமளியுங்கள்.
- கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- அரும் பதங்கள்

**اللهم** : இறைவா

**عافنى** : நலன் அருள்/ஆரோக்கியப்படுத்து

**بدنى** : எனது உடம்பு

**سمعى** : எனது செவிப்புலன்

**بصرى** : எனது பார்வைப்புலன்

இணைப்பு : 5.2.1

01

**اللهم اجعل فى قلبى نورا وفى لساني نوراواجعل فى سمعى نورا،واجعل فى بصرى نورا،واجعل من خلفى نورا ومن امامى نورا،واجعل من فوقى نورا،ومن تحتى نورا، اللهم اعطنى نورا،**

02

**اللهم انى أعوذبك من ان اضل او أُضلَّ او ازَلَّ او أُزلَّ او اَظلمَ او أُظلِمَ او اجهل او يجهل عليَّ**

03

**اللهم باعد بيني وبين خطاياي كما باعدت بين المشرق والمغرب**

**اللهم نقنى من خطاياي كما ينقى الثوب الأبيض من الدنس**

**اللهم اغسلنى من خطاياي بالثلج والماء والبرد**

04

**اللهم انى اسألك الهدى والتقى والعفاف والغنى**

**اعظم الله اجرك واحسن عزاءك وغفرلميتك**

**தேர்ச்சி 6.0 : அறபுக் கவிதைகளை வாசித்து இலக்கிய நயங்களை வெளிப்படுத்திக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :**

**தெரிவு செய்யப்பட்ட கவிதைகளை விளங்கி தனது நடையில் கூறுவார்.**

**பாடவேளை : 10**

**கற்றல் பேறுகள்:**

- கவிதைகளை மொழிபெயர்த்துக் கூறுவார்.
- கவிதைகளில் கையாளப்பட்டுள்ள சொல் நயத்தைக் கண்டறிந்து கூறுவார்.
- கவிதைகளில் எடுத்தாளப்பட்டுள்ள உவமை உருவகங்களை எடுத்துக் காட்டுவார்.
- கவிதைகளின் மொழிசார் அணிகளைக் கண்டறிந்து கூறுவார்.
- கவிதைகளில் உள்ளடங்கியுள்ள இலக்கியப் நயங்களை கண்டறிந்து எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

:
- மாணவர்கள் தாம் அறிந்து வைத்துள்ள ஏதேனும் அறபுக் கவிதையொன்றை வாசித்துக் காட்டும்படி கேளுங்கள்.
- மாணவர்கள் வாசித்த கவிதை தொடர்பாக மாணவர்களது கருத்துக்களை வினவுங்கள்.

பின்வரும் கவிதையை ஓசை நயத்துடன் வாசித்துக் காட்டி அதன் பொருளை விளக்குங்கள்.

ان سـألتنى عـن الهـى فهـو رحمـان رحيـم
ان سـألتنى عـن نبـيي فهـو انسـان عظيـم
ان سـألتنى عـن كتـابي فهـو قـرآن كـريم
ان سـألتنى عـن عـدوي فهـو شـيطان رجيـم

நீங்கள் என் இரட்சகன் பற்றிக் கேட்டால்
அவனோ அருளாளன் அன்புடையோன்
நீங்கள் என் நபி பற்றிக் கேட்டால்
அவரோ மகத்தான ஒரு மனிதன்
நீங்கள் என் வேதம் பற்றிக் கேட்டால்
அதுவோ சங்கைமிகு குர்ஆன்
நீங்கள் என் எதிரி பற்றிக் கேட்டால்
அவனோ எடுத்தெறியப்பட்ட ஷைத்தான்

இக்கவிதை இலகுவான சொல்லாட்சி கொண்ட, தெளிவான கருத்தைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது.

إلهي, نبيي, كتابي, عدوي போன்ற ஹர்பு யா இணைந்த சொற்களும். إنسان عظيم, رحمان رحيم, شيطان رجيم, كتاب كريم

போன்ற ஒத்த ஓசைச் சொற் பிணைப்புக்களும் கவிதையின் ஓசை நயத்துக்கு மேலும் வலுவூட்டுகின்றன.

- இணைப்பு 6.1.1 வழங்கப்பட்டுள்ள ஏனைய கவிதைகளையும் மொழிபெயர்த்து, அவற்றில் கையாளப்பட்டுள்ள சொல் நயம், உருவகங்கள், மொழி அணிகள் போன்றவற்றை விளக்குங்கள்.

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**அரும்பதங்கள்**

| | |
|---|---|
| إلهي | எனது இரட்சகன் |
| عدوي | எனது எதிரி |
| سألتم | நீங்கள் கேட்டீர்கள் |
| عظيم | மகத்தானவர் |
| رجيم | எடுத்தெறியப்பட்டவன் |

**இணைப்பு : 6.1.1**

01

<u>قطتي</u>

قطتي صغيرة

اسمها سميرة

ذيلها طويلة

شكلها جميل

شعرها نظيفة

لعبها لطيف

áÚÈåÇ áØíÝ

02

## الصـــلاة

هيّا هيّـا نحـو المســجد
أدخـل ادخـل صـلّ واعبـد
صـلّ واعبـد هيّـا هيّـا

قـم فتوضـأ واشـرح صـدرك
كبّـر كبّـر اركـع واسـجد
واعبـد ربـك هيّـا هيّـا

صـلّ صـلّ يـا انسـان
طهّـر قلبـك بالايمـان
بالايمـان هيّـا هيّـا

ابعَـد عنّـى يـا شـيطان
بعـد صـلاتى أنـا فرحـان
انـا فرحـان هيّـا هيّـا
- - - - - -

03

## طلــع البـدر علينــا

| | |
|---|---|
| طلـع البـدر علينـا | مـن ثنيـات الـوداع |
| وجـب الشـكر علينـا | مـا دعـا لله داع |
| أيهـا المبعـوث فينـا | جئـت بـالامر المطـاع |
| جئـت نـورت المدينـة | مرحبـا يـاخير داع |

## 04 النظـام

ان الـذى يرتـب متاعـه لايتعـبa
فكـل شـيئ عنـده موضـع أعـدَّه
مـتى يعـد اليـه يجـده فـي يديه
فوقتـــه مـــدبَّرٌ وجُهده موفـر
فـاحرص علـى النظـام تحقـق المـرام

## 05 صـوم رمضـان

رمضـان يـا رمضـان يـا موسـم القـرآن
أقبلـت بالبشـرى والخـير والغفـران
يـا اخوتـى هيـا صـوموا معـى رمضـان
هيـا بنـا نعمـل للواحـد الـدَّيان
رمضـان انـوار تهـدى الـى الإيمـان
هيـا نحييـه بالـذكر والاحسـان

## 06 الـوطن

نحـن اولاد صـغار
جـدُّنا مثـلَ الكبـار
فرضُـنا حفـظ الـوطن
عَـن شـرورٍ وفتـن
دينئـا دِيـن الاسـلام
ليـس فيـه مـن خصـام
فيـه درسٌ للايمـان
للمحبـة والوئـام
نطلـبُ العـزَّ التـام
بيـنَ اقـوامٍ عظـامِ

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **7.0** | **:** | **அறபுக் கதைகளை வாசித்து, எழுதி, சுவைத்து வெளிப்படுத்துவார்** |
| **தேர்ச்சி மட்டம்** | **7.1** | **:** | **அறபுக் கதைகளைத் திரட்டியும், வாசித்தும் நயம் காண்பார்.** |
| | **7.2** | **:** | **அறபுக் கதைகளை எழுதி வருவார்.** |
| **விடய உள்ளடக்கம்** | | **:** | **அறபுக் கதைகள்** |
| **பாடவேளை** | | **:** | **8** |

**கற்றல் பேறுகள்:**

- கதைகளின் மையக்கருத்தை வெளிப்படுத்துவார்.
- கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களின் விழுமியங்களை எடுத்துக்காட்டுவார்.
- சிறிய கதைகளை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- கதைகளில் காணப்படும் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டுவார்.
- கதைகளில் காணப்படும் இலக்கிய நயங்களை சுட்டிக்காட்டி விளக்கமளிப்பார்.
- இலக்கியச் சுவைமிகு கதைகளை வாசித்து தொகுத்துக் பாதுகாப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

- القناعة كنز لا يفنى என்ற கதையை கருத்தூன்றி வாசிக்கச் செய்யுங்கள். கதையின் உள்ளடக்கம் பற்றி மாணவரது கருத்துக்களை கேட்டறியுங்கள்.
- கதையில் தான் விளங்கியவற்றை தனது நடையில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கி அவற்றை நெறிப்படுத்துங்கள்.
- கதையில் உள்ள அரும்பதங்களை விளக்கி அவற்றின் பிரயோகத்தை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுங்கள். அரும்பதங்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் உருவாக்க வழிப்படுத்துங்கள். கதாபாத்திரங்களின் விழுமியப்பண்புகளை வேறுபடுத்திக் காட்டி விளக்குங்கள்.
- இலக்கியத்தில் கதை முக்கியமான ஓர் அம்சமாகும். ஒரு கருத்தை விரிவாகவும் சுவையாகவும் இலகுவாகவும் முன்வைப்பதற்கு இது உதவும். மொழிப்புலமை, சொல் வளம், கற்பனைத் திறன் அபிநயம் போன்ற வற்றின் விருத்திக்கும் புத்தாக்க சிந்தனைக்கும் கதைகள் துணைசெய்கின்றன.
- இணைப்பில் தரப்பட்டுள்ள கதையில் விவசாயி என்ற கதாபாத்திரம் உளத்திருப்தியே மிகப் பெரும் பொக்கிஷம் என்பதை அழகாக முன்வைக்கிறது. பெரும் சொத்து செல்வங்களின் சொந்தக்காரர்கள் உளத்திருப்தியோடு இல்லை எனில், ஏழைகளுக்கு முன்னால் அவர்களும் அற்பர்களாகவே இருப்பார்கள்.
- ஆன்மீக பலமே ஒருவரது உளத்திருப்திக்கு வழிவகுக்கும் என விவசாயி என்ற கதாபாத்திரத்தினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

- இணைப்பு 7.1.1 இல் வழங்கப்பட்டுள்ள ஏனைய கதைகளை வாசித்து அவற்றின் கருத்தை விளங்கி அவற்றின் கதாபாத்திரங்களின் நயங்களையும் விழுமியப்பண்புகளையும் எடுத்துக் கூற வழிப்படுத்துங்கள். அவ்வாறே இதனை ஒத்த சிறிய கதைகளை உருவாக்கவும் அவற்றை நயக்கவும் வழிகாட்டுங்கள்.

கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அரும் பதங்கள் :

**اثريـــاء** - செல்வந்தர்கள்

**ايـذاء** - நோவினை செய்தல்

**ذهب** - தங்கம்

**مـا يكفـى** - போதுமான அளவு

**يمـلأ** - நிரப்பக் கூடியது

**كـوخ** - குடிசை

**فضـــة** - வெள்ளி

**مـا يعـادل** - நிகரான அளவு

**حنطـة** - கோதுமை

جواهر - மாணிக்கக்கற்கள்

**بـــائس** - அற்ப(மான)

**رمقكهـــم بنظـــرة احتقــار** - அவர்களை அற்பமாகப் பார்த்தான்

**كــنز** - பொக்கிஷம்

**قهقـه** - சத்தமிட்டுச் சிரித்தல்

عينـــان تبرقـــان - பிரகாசிக்கும் கண்கள்

இணைப்பு : 7.1.1

**القناعـــة كـــنز لا يفـــنى**

**كـان الفـلاح جالسـا يتوضـأ مـن السـاقية مـر بـه ثلاثـة رجـال اثريـاء, وتوقفـوا عنـده. أرادوا إيـذاءه فجعلـوا يتحـدثون قـال أحـدهم إنـنى أملـك مـن الـذهب مـا يكفـى ان يمـلأ كـوخ هـذا الفـلاح الفقـير وقـال أخـر إنـنى أملـك مـن الفضـة مـا يعـادل بيـد الحنطـة هـذا**

**وقـال الثـالث أمـا أنـا فأملـك مـن الجواهـر مـا يعـادل وزن هـذا الفـلاح البـائس نهـض الفـلاح مـن مكانـه ورمقهـم بنظـرة احتقـار, وقـال أمـا أنـا فأملـك كـنزا كبـيرا تضـيع فيـه جميـع كنـوزكم فقهقـه الرجـال الأثريـاء وقـالوا يـا لـك مـن فـلاح فقـير مجنـون**

**திருப்தியே அழியாப் பொக்கிஷம்**

ஒரு விவசாயி ஓடையில் வுழு செய்து கொண்டிருந்தார். அவரைக் கடந்து சென்ற மூன்று பெரும் செல்வந்தர்கள் அந்த இடத்தில் நின்று விவசாயியை உற்று நோக்கி, அவரை கிண்டல் செய்ய விரும்பினார்கள். அவர்களுள் ஒருவர், ''என்னிடத்தில் இந்த விவசாயியின் குடிசையை நிரப்பும் அளவிற்கு தங்கம் இருக்கின்றது'' என்றார்.. அடுத்தவரோ ''இவரது கையில் இருக்கின்ற கோதுமையின் அளவிற்கு என்னிடத்தில் வெள்ளி இருக்கின்றது'' என்றார். மூன்றாமவரோ ''இந்த அப்பாவி விவசாயியின் நிறையை ஒத்தளவு என்னிடம் மாணிக்கங்கள் இருக்கின்றன'' என்றார். இதைக் கேட்ட விவசாயி தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து அம்மூவரையும் அற்பப் பார்வையோடு உற்று நோக்கி பின்வருமாறு கூறினார். ''உங்கள் அனைவரிடமும் உள்ள செல்வங்களை அழித்து விடும் அளவு பெரியதொரு பொக்கிஷத்துக்கு சொந்தக்காரனாக நானுள்ளேன். இதனைக் கேட்டு பணக்காரர்கள் வாய்விட்டுச் சிரித்தனர். பைத்தியகார ஏழை விவசாயியே, உனக்கு எங்கே இவை எல்லாம் இருக்கப் போகின்றன என்றனர். ஈமானின் பிரகாசம் நிரம்பிய (கண்களுடன்) விவசாயி, ஆம் பெரியதொரு பொக்கிஷத்துக்கு நான் சொந்தக்காரனாவேன். அதனை நான் சுமந்து கொண்டுமிருக்கிறேன். அதனை நான் என் உள்ளத்தில் வைத்துக் கொண்டும் இருக்கிறேன். அது தான் திருப்தி. திருப்தி ஒரு பொக்கிஷம். அது அழியாதது என்றான். இதனைக் கேட்ட பணக்காரர் வாயடைத்துப் போயினர். தலை குனிந்த வண்ணம் சென்றனர். விவசாயியோ இறைபக்தியோடு தொழுது கொண்டிருந்தார்.

**رَدُّ جَمِيْلٍ**

نـام الأسـد فـى ظـل شـجرة فسـقط منهـا فـأرعلى وجـه
الأسـد اسـتيقظ الأسـد غاضـبا وأمسـك الفـأر بيـده بكـى
الفـأر واسـتعطف الأسـد رق الأسـد للفـأر فتركـه شـكر
الفـأر الأسـد ووعـد بـرد الجميـل فضـحك الأسـد سـاخرا

وفـي يـوم نصـب صـياد شـبكته فوقـع الأسـد فـى
الشـبكة وعجـز عـن التخلـص منهـا, فـزأر زئـيرا عاليـا
سـمع الفـأر صـراخ الأسـد فأقبـل مسـرعا وجعـل يقـرض
الشـبكة بأسـنانه الحـادة حـتى خلـص الأسـد ورد جميلـه

# شـجاعة صـبي

مـر الخليفـة عمـر بـن الخطـاب يومـا بأحـد شـوارع المدينـة
فيـه أطفـال يلعبـون فلمـا أبصـروا أبصـروا الخليفـة
هـربوا الا صـبيا وقـف جانـب الطـريق

سـأل عمـر الصـبي : لمـاذا لـم تهـرب مـع رفاقـك قـال
الصـبي : يـا أمـير المـؤمنين ليـس الطـريق ضـيقة
فأوسـع لـك ولـم افعـل شـيئا فأخـاف منـك فسـر عمـر مـن
شـجاعته هـذا الصـبي الشـجاع هـو عبـد الله بـن الزيـد الـذي
اصـبح مـن عظمـاء الحـرب والسياسـة

**தேர்ச்சி 8.0 : அறபுப் பழமொழிகளைக் கண்டறிந்து வாசித்து அவற்றின் பின்னணியையும் அவற்றின் இலக்கிய நயத்தையும் எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1 : அறபுப் பழமொழிகளை கண்டறிந்து அவற்றின் இலக்கிய நயம் காண்பார்.**

**விடய உள்ளடக்கம் : அறபுப் பழமொழிகள்**

**பாடவேளை : 4**

**கற்றல் பேறுகள்:**

- பழமொழி என்றால் என்ன என்பதைஅறிந்து கூறுவார்.
- அறபுப் பழமொழியில் உள்ளடங்குபவற்றை விளக்குவார்
- அறபுப் பழமொழியின் ஆரம்ப வரலாற்றை சுருக்கமாக விபரிப்பார்.
- அறபுப் பழமொழியின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

- "உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தல்" என்ற தமிழ் பழ மொழிக்குப் பொருத்தமான "أكلتم تمري وعصيتم امري" என்ற அறபுப் பழமொழியை எடுத்துக்கூறிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அறபு மொழியில், பழமொழிகள் امثال العرب என அழைக்கப்படுகின்றன. இவை நம் முன்னோர் அனுபவவாயிலாகக் கண்டறிந்த உண்மைகளைச் சுருக்கமாகவும் பொருள் பொதிந்தாகவும் அழகுற ஆக்கிக் கூறியவையாகும். அவர்கள் கூறிய பழமையும் பொருட்செறிவும் பொருந்திய அம்மொழிகள் பழமொழிகள் امثال العرب என வழங்கப்படுகின்றன.

  இவை மொழிக்கு வளம் சேர்க்கின்றன. கருத்துக்களை செறிவாகவும் சுருக்கமாகவும் ரசனைக்குரியதாகவும் அழகாகவும் வலியுறுத்தியும் முன்வைக்க துணை செய்கின்றன.
- (امثال العرب ஐ தமிழில் நேரடியாக மொழி பெயர்ப்பதை விட தமிழ் மரபுக்கு ஒத்துவருகின்றவகையில் அவற்றை நோக்குவது பயனுடையதாகும். பழமொழிகளின் நேரடிக்கருத்தைக் கொள்ளாது அதன் உட்கருத்தை அறிந்து பயன்படுத்த வேண்டும்.
- தெரிவு செய்யப்பட்ட சில பழமொழிகளுக்கு விளக்கமளியுங்கள். உதாரணமாக يعرف من اين تأكل الكتف என்பதன் நேரடிக் கருத்து "தொடைப் பகுதி எங்கிருந்து சாப்பிடப்பட வேண்டும் என்பதை அறிவார்." எனினும் இதுகுறித்த ஒருவிடயத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரைக் குறிக்கவே இது பயன்படுத்தப்படுகிறது.

  உதாரணம் இரண்டு : - مقتل الرجل بين فكيه என்ற பழமொழியின் நேரடிக்கருத்து, "மனிதனின் சாவு அவனது இரு தாடைகளுக்கும் இடையே உள்ளது." இது "தவளை தன் வாயால் கெடும்" என்ற தமிழ் பழமொழிக் கருத்தை ஒத்ததாகும்.

- ஒவ்வொரு பழமொழியினதும் இலக்கிய நயம் பற்றி விளக்க வேண்டும். வேடுவ தொழிலை மேற்கொண்ட சமூகத்திற்கு மிகவும் பரீட்சயமாக இருந்த ஒன்றை நினைவுபடுத்தி அதனை புசிப்பதில் பெற்றிருந்த அனுபவ அறிவை நிபுணத்துவம் பெற்ற ஒருவருக்கு ஒப்பு நோக்கியுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். வேட்டையைத் தொழிலாகக் கொண்ட சமூகத்திற்கு மிகத் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் இங்கு விளக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

  இரண்டாவது பழமொழி, நாவின் விபரீதத்தை விளக்குகின்றது. ஒருவரின் நாவால் ஏற்படும் தவறு, அவரை அழிவுக்கே இட்டுச் செல்லக் கூடியதாகும். ஆதலால் வார்த்தைகளைப் பயன்படுத்தும் போது மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

- இப்பழமொழிகளை வேறு அறபு இலக்கிய மூலங்களின் அம்சங்களோடு ஒப்பிட்டு அதன் ரசனையை விளக்கலாம். உதாரணமாக, நபி அவர்கள் ஆட்டின் தொடைப் பகுதியையே விரும்பிக் சாப்பிட்டார்கள் என்ற ஹதீஸில் கதிப் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே உதாரணம் இரண்டில், اضمن لعبدي...... என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்று நாவைப் பாதுகாததுக கொள்வதற்கு கிடைக்கும் சுவன வெகுமதியை வாக்குறுதி அளிக்கிறது. இங்கும் பக்கைஹி என்ற அதே தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.
- இவ்வாறே இணைப்பில் உள்ள ஏனைய பழமொழிகளையும் விளக்கலாம்.
- ஒத்த கருத்துள்ள வேறு பழமொழிகளையும் பயன்படுத்தி இதன் இரசனையை நயக்க முடியும்.
- இணைப்பு 8.1.1 இல் வழங்கப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்துக்களை விளக்கி அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துரையுங்கள்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்குங்கள்.

அரும் பதங்கள் :

يعرف - அறிவான்

من اين - எங்கிருந்து

تأكل - சாப்பிடப்படும்

الكتف - தொடை

مقتل - மரணம்

بين فكيه - தனது இரு தாடைகளுக்கு இடையே

**இணைப்பு : 8.1.1**

1-

| | |
|---|---|
| அறபு | لكل جواد كبوة |
| அறபுக் கருத்து | يضرب للكفء يفشل في عمل من الأعمال |
| தமிழ் நேரடிக்கருத்து | ஒவ்வொரு குதிரைக்கும் தவறு நிகழ்வதுண்டு |
| தமிழ் மரபு | ஆனைக்கும் அடி சறுக்கும், நான்கு கால் இருந்தும் குதிரை சறுக்குவதுண்டு |

2-

| | |
|---|---|
| அறபு | ليسَ لرجلٍ لُدغ من جحر مرتين عذرٌ |
| அறபுக் கருத்து | يضرب للرجل لا تعظه تجاربه مع الآخرين |
| தமிழ் நேரடிக்கருத்து | ஒரு மனிதன் ஒரு புற்றிலிருந்து இரு தடவைகள் தீண்டப்பட்டால் அதற்கு நியாயம் சொல்ல முடியாது. |
| தமிழ் மரபு | சூடுகண்ட பூனை அடுப்பங்கரை அண்டாது |

3-

| | |
|---|---|
| அறபு | كُل فتاةٍ بأبيها مُعجَبَة |
| அறபுக் கருத்து | يضرب للتشابه الواضح بين البنت وأبيها |
| தமிழ் நேரடிக்கருத்து | ஒவ்வொரு யுவதியும் தன் தந்தையை பற்றி திருப்திப்பட்டவளாக இருப்பாள் |
| தமிழ் மரபு | தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை |

4-

| | |
|---|---|
| அறபு | حبك الشيئ يعمى ويصم |
| அறபுக் கருத்து | يضرب لمن يتغاضى عن إساءة من يحب |
| தமிழ் நேரடிக்கருத்து | குறித்த ஒன்றின் மீதுள்ள உனது அன்பு உன்னைக் குருடாகவும் செவிடாகவும் ஆக்கி விடும் |
| தமிழ் மரபு | ஆசை வெட்கமறியாது/ காதலுக்கு கண் இல்லை |

5-

| | |
|---|---|
| அறபு | ان الحديد بالحديد يفلح |
| அறபுக் கருத்து | يضرب لمواجهة القوة بالقوة |
| தமிழ் நேரடிக்கருத்து | நிச்சயமாக இரும்பை இருப்பினால் தான் இழகக் செய்ய வேண்டும் |
| தமிழ் மரபு | முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் |

6-

அறபு رب أخ لك لم تلده أمك

அறபுக் கருத்து يضرب للصديق المخلص

தமிழ் நேரடிக்கருத்து உனது தாய் பெற்றெடுக்காத பலர் உனக்கு சகோதரனாக இருப்பர்

தமிழ் மரபு பெற்றால் மட்டுமா பிள்ளை

7-

அறபு اعن اخاك ولو بالصوت

அறபுக் கருத்து يضرب فى الحث على نصرة الإخوان

தமிழ் நேரடிக்கருத்து உன் சகோதரனுக்கு குரலெழுப்பியேனும் உதவி செய்

தமிழ் மரபு சிறு துரும்பும் பற்குத்த உதவும்

8-

அறபு جعل الحبة قبة

அறபுக் கருத்து يضرب لجعل امر بسيط امرا جديا

தமிழ் நேரடிக்கருத்து விதையை பெரும் கோபுரமாக மாற்றினான்

தமிழ் மரபு ஊதிப் பெருப்பித்தான்

9

அறபு كما تزرع تحصد

அறபுக் கருத்து يضرب فى الحص على الخير

தமிழ் நேரடிக்கருத்து நீ விதைத்ததைப் போல அறுவடை செய்வாய்

தமிழ் மரபு தினை விதைத்தவன் தினை அறுப்பான்

10

அறபு اسمع جعجعة ولا ارى طحنا

அறபுக் கருத்து يضرب للبخيل يعد ولا ينجز

தமிழ் நேரடிக்கருத்து அரைக்கிற சப்தத்தை செவிமடுத்தோம்; மாவைக் காணவில்லை

தமிழ் மரபு சிலிசிலிப்பு மட்டும்; பலகாரம் இல்லை

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **8.0** | **:** | **அறபுப் பழமொழிகளைக் கண்டறிந்து அவற்றின் பின்னணியையும் இலக்கிய நயத்தையும் எடுத்துக் கூறுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **8.2** | **:** | **அறபுப் பழமொழிகளை மொழிப்பிரயோகத்தில் பயன்படுத்திக் காட்டுவார்** |
| **விடய உள்ளடக்கம்** | | **:** | **அறபுப் பழமொழிகளின் பிரயோகம்** |
| **பாடவேளை** | | **:** | **4** |

**கற்றல் பேறுகள்:**

- அறபுப் பழமொழிகளை உரைநடையில் பயன்படுத்திக் காட்டுவார்.
- அறபுப் பழமொழிகளை உள்ளடக்கிய எழுத்தாக்கங்களைத் தேடி தமது ஆக்கங்களில் எடுத்தாள்வார்.
- அறபுப் பழமொழிகளின் பின்னணியில் அமைந்துள்ள கதைகள், நிகழ்வுகள் போன்றவற்றை கண்டறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்:**

- சம்மின் கல்பக யஃகுலுக, **(سمن كلبك يأكلك)** நாயைக் கொழுக்கச் செய். அது உன்னைச் சாப்பிடும் என்ற கருத்தைத் தரும் பழமொழியை (தமிழ் மரபான, வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது என்ற பழமொழியை) எடுத்துக்கூறி அது உருவாகக் காரணமாக அமைந்த பின்னணி நிகழ்வு பற்றிக் கலந்துரையாடி பாடப் பிரவேசம் செய்க.
- நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலான பழமொழிகள் தோன்றியுள்ளன. குறித்த நிகழ்வை புரிந்து கொள்வதன் மூலமே அந்தப் பழ மொாழி தரும் யதார்த்தமான கருத்தை விளங்கிக் கொள்ளலாம்.

  உதாரணமாக, **احمق من هبنقة**, ஹபன்னகாவை விட படுமுட்டாள் என்ற கருத்தைத் தரும் இந்தப் பழமொழியின் நேரடிக் கருத்தைப் பார்க்கும் போது அது கருத்தற்றதாகவே தோன்றும். ஆனால் இப்பழமொழி தோன்றியமைக்கு பின்னணியாக அமைந்த நிகழ்வைப் புரிந்து கொள்வதன் மூலம் தெளிவான கருத்தை விளங்கிக் கொள்ளலாம். உண்மையில் ஒருவரது முட்டாள் தனத்தை சுட்டிக்காட்டவே இது பயன்படுத்தப்படுகிறது. ஹபன்னகா என்பவன் தனது கழுத்தில் மாலை ஒன்றை அணிந்திருந்தான். ஏன் அதனை அணிந்திருக்கிறீர் என அவரிடம் வினவப்பட்டதற்கு அதன் மூலம் என்னை நான் அடையாளம் கண்டு கொள்வதற்கும் நான் வழிதவறி தொலைந்து போகாமல் இருப்பதற்கும் எனப் பதிலளித்தார். ஒருநாள் இரவில் அவரது சகோதரன் அந்த மாலையை அணிந்து கொண்டார். காலையானதும் ஹபன்னகா தனது சகோதரனின் கழுத்தில் மாலையைக் கண்டதும் ''என் சகோதரனே நீ தான் நான். அப்படியானால் நான் யார்'' எனக் கேட்டான்.
- இப் பழமொழி மூன்று சொற்களில் மிக விரிந்த கருத்தை தரும் வகையில் அமைந்துள்ளது. இது அறபு இலக்கியத்தின் செழுமைக்கான ஓர் உதாரணமாகும். ஒரு பழமொழியின் பின்னணியை விளங்கும் போதே உண்மையான ரசனையை நயக்க முடியும்.

- இரசனையோடு ஒரு விடயத்தை விளக்குவதற்கு பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே சிக்கலான விடயங்களைக் கூட பழமொழிகளின் பின்னணியை அறிந்து கொள்வதன் மூலம் இலகுவாகவும் நயத்தலோடும் விளங்கிக் கொள்ள முடியும்
- மேலும் நயக்கத்தக்க வகையில் ஒருவரின் செயலை எடுத்துக்காட்டுவதற்கு பழமொழிகள் மிகப் பொருத்தமானவையாகும்,
- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள பழமொழிகளையும் பின்னணிகளையும் மாணவர்களுக்கு இலக்கியச் சுவையோடு விளக்குங்கள். அவற்றை உரைநடைகளில் பயன்படுத்தவும் பயிற்சியளியுங்கள்.

கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அரும் பதங்கள் : احمق - படுமுட்டாள்

هبنقـــة - ஒருவரின் பெயர்

**இணைப்பு**

1. سـمن كلبـك يأكلـك

2. عش رجبا ترى عجبا

3. مواعد عرقوب

4. مأدبــة لا حفــاوة

5. اجود من حاتم

6. أبطأ من غراب

**தேர்ச்சி 9.0 : அறபுத்தமிழிலக்கியம் பற்றி விளங்கி ஏனையோருக்கும் எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 : அறபுத் தமிழின் தோற்றம் வளர்ச்சி பற்றிய வரலாற்றை தொகுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 5**

**கற்றல் பேறுகள்:**

- அறபுத் தமிழ் ஒரு மொழிவடிவமாக தோற்றம் பெற்றமைக்கான பின்னணியை விபரிப்பார்.
- அறபுத் தமிழ் மரபின் சிறப்பம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.
- அறபுத் தமிழ் மரபின் வளர்ச்சி பற்றி விளக்குவார்
- அறபுத் தமிழின் இலக்கியப்பங்களிப்பை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- அறபுத் தமிழ் அரிச்சுவடியை காட்சிப்படுத்தி அறபுத் தமிழ் தொடர்பான அடிப்படை விடயங்கள் குறித்து கலந்துரையாடி பாடத்தில் பிரவேசியுங்கள்.
- 18 ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும், இலங்கையிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் உச்சரிப்பை அறபியில் எழுதும் வழக்கத்தை கொண்டிருந்தார்கள். இதனையே அறபுத் தமிழ் என்கிறோம்.
- அறபு மொழியின் 28 எழுத்துக்களுடன் மேலும் 11 புதிய எழுத்துக்கள் சேர்ந்து அறபுத் தமிழ் அரிச்சுவடி உருவாக்கப்பட்டுள்ளது. தமிழில் உள்ள ள, ழ, ண, ட முதலான எழுத்துக்களை உச்சரிப்பதற்கு அறபு எழுத்துக்கள் இல்லாத காரணத்தினால் அவற்றிற்கு பகரமாக தமிழ் எழுத்துக்கு சற்று முன்பின் சம ஒலியுள்ள எழுத்துக்கள் உருமாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டன.
- தமிழில் மாத்திரமன்றி, உலகில் வேறு பல மொழிகளும் அறபு லிபியில் எழுதப்பட்டுள்ளமை பொதுவானதொரு அம்சமாகும். தென்கிழக்கு ஆபிரிக்காவின் தன்ஸானியாவில் சுவாஹிலி மொழி, மலேசியாவின் ஜாவி மொழி, துருக்கிய மொழி, உஸ்பெக் மொழி முதலானவை அறபு லிபியில் எழுதப்பட்ட சில மொழிகளாகும்.
- ஹிந்தியை அறபு மொழியில் எழுதத் தொடங்கி அதன் மருவிய வடிவத்தைப் பின்பற்றி உர்து மொழி தோன்றியதென்பர்.
- திருக்குர்ஆனுக்கு அறபு அல்லாத ஏனைய மொழிகளில் விளக்க உரை எழுதும் போது அதன் கருத்துக்கள் மற்றும் உச்சரிப்புக்கள் சிதைவடைவதனால் அறபு அல்லாத மொழியில் விளக்கங்கள் எழுதுவது

தடைசெய்யப்படடிருந்த காலப்பகுதியில் அறபுத் தமிழ் அல்குர்ஆனுக்கான விளக்கங்களை வழங்கும் வகையில் எழுச்சி பெற்றது.

- இவ்வாறு அறபுத் தமிழில் எழுதப்பட்ட அல்குர்ஆன் விளக்க நூல்கள் பல காணப்படுகின்றன. தப்ஸீர் பத்ஹுல் கரீம், தப்ஸீர் பத்ஹுர் றஹீம், புதூஹுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரில் கலாமிர் ரப்பானியா முதலானவை முக்கியமானவையாகும்.
- அறபுத் தமிழ் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவின் தமிழ் நாட்டின் தமிழ் பேசும் முஸ்லிம்களின் புதிய கலாசார மொழி மரபு என்ற வகையில் முக்கிய அந்தஸ்தைப் பெறுகிறது. அவ்வாறே கலாசார பரிமாற்றங்களையும் பிணைப்புக்களையும் அறபுத் தமிழ் ஏற்படுத்தியுள்ளது.
- தமிழ் எழுத வாசிக்கத் தெரியாத மக்களுக்கு இஸ்லாத்தையும் இஸ்லாம் சம்பந்தப்பட்ட விடயங்களையும் அறிந்து கொள்வதற்காக ஆரம்பத்தில் அறபுத் தமிழ் பயன்படுத்தப்பட்டு காலப்போக்கில் தினசரிவரை அறபுத் தமிழ் பயன்படுத்தி வெளியிடப்பட்டமை அதன் வளர்ச்சியை விளங்குவதற்கு போதுமானதாகும்.
- அறபுத் தமிழைப் பயன்படுத்தி பல்வேறு இலக்கிய வடிவங்கள் உருவாக்கப்பட்டு அவை நீண்ட காலம் சமூகத்தில் பயன்படுத்தி ரசனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.
- கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 9.0 : அறபுத்தமிழிலக்கியம் பற்றி விளங்கி ஏனையோருக்கும் எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 9.2 : அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களை இனங்கண்டு அறபு இலக்கிய வடிவங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுவார்.
- அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.
- அறபுத் தமிழ் இலக்கியங்களை வாசித்து நயம் கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • பின்வரும் பாடலை காட்சிப்படுத்தி மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.

تيدا ترويمى تيننب كرفكمى
كودان كود توم كندو رندو رمذديل
شورينم شنترنم شلم افلاكنيتم
وار انم بحر ثوم واضتمعكض فاطمتى

தேடா திரவியமே தேனின்ப கற்பகமே
கோடான கோடி தவம் கொண்டோ ருமதடியில்
சூரியனும் சந்திரனும் சொல்லும் அப்லாக் அனைத்தும்
வாரி எனும் பஹ்ர் அதுவும் வாழ்த்து மெங்கள் பாத்திமத்தே

- மேலுள்ள கவிதையை வாசித்துக் காட்டுங்கள். (தலைப்பாத்திஹா)
  அறபும் தமிழும் இணைக்கப்பட்டிருப்பதை அடையாளப்படுத்துங்கள்.
  (அப்லாக் - வானங்கள்- பஹ்ர் - கடல்)
- கவிதையமைப்பு, சொற்பிரயோகம், இசையமைப்பு, நயம் என்பன பற்றிக் கருத்துப் பரிமாறுங்கள்.
- தமிழிலக்கிய வடிவங்கள் போன்றே அறபுத் தமிழிலும் பல இலக்கியவடிவங்கள் உள்ளன. (உ-ம் : கிஸ்ஸா, நாமா, மசாலா, முனாஜாத் )

- அவற்றில் பல சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன.
- அறபு எழுத்தினாலானது தமிழ் இலக்கணத்தை தழுவியது.
- இடையிடையே அறபுச் சொற்களையும், சொற்றொடர்களையும் கையாண்டுள்ளது.
- அல்குர்ஆன், ஹதீஸ் பிரயோகங்கள் பொருட் சிதைவு ஏற்படாமல் பயன்படுத்தப்படுகிறது.